SRI KAMAKOTI GRANTHAVALI SERIES 9

SRI

# SHANTI VILASA

BY

Sri NILAKANTHA DIKSHITA

Text in Sanskrit with Tamil Translation

BY

Sri Y. MAHALINGA SASTRI M.A., B.L.,

with a Foreword by

Dewan Bahadur N. ... RASEKHARA AIYER, B.A., B.L.,

Jud... Court, Madras

AND

with the Sri Mukham of His Holiness

SRI SANKARACHARYA SWAMIGAL

of Kanchi Kamakoti Pitha, Kumbakonam.



श्रीकामकोटिर्विजयते

SRI KAMAKOTI PUBLISHING HOUSE

57. WEST DABIR ST., KUMBAKONAM

Copyright] 1943. [Price As. 6

# ॥ श्रीशान्तिविलासः ॥

# ஸ்ரீ சாந்தி விலாஸ:

## ॥ प्रार्थना ॥

---

निर्मर्यादः परमचपलो निःसमाज्ञानराशि-
र्मादृशोऽन्यः क इति भुवने मार्गणीयं त्वयैव ।
ईदृक्षेऽपि क्वचिदिह दयेयेति कौतूहलं चेत्
स्वामिन् विश्वेश्वर तव भवं निस्तरेयं तदाऽहम् ॥ ४४ ॥

श्रीकामकोटिग्रन्थावलिः ९

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वराय नमः ॥

श्रीमन्नीलकण्ठदीक्षितवर्यैः प्रणीतः

# ॥ श्रीशान्तिविलासः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीकामकोटिपीठाधीश्वर
जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासितः



श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटिकोशस्थानेन प्रकाशितः
५७, पश्चिम डबीर् वीथी, कुम्भघोणम्.

मूल्यम् आणकषट्कम्] 1943 [स्वाम्यं कोशस्थानस्यैव

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதவர்யர் அவர்கள்

இயற்றிய

# ஸ்ரீ சாந்தி விலாஸ:

ஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரி எம்.ஏ., பி.எல்.

எழுதிய தமிழ் அனுவாதத்துடனும்

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் கனம்

திவான்பகதூர் ஸ்ரீ N. சந்த்ரசேகர அய்யர் அவர்கள்

எழுதிய முன்னுரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய ஸ்ரீமுகத்துடனும்

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு, கும்பகோணம்

பதிப்புரிமை] 1943 [விலை அணா 6



ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

श्रीः

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य श्रीमच्छंकरभगवत्पादप्रतिष्ठित श्रीकाञ्चीकामकोटिपीठाधीश्वर जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः क्रियते नारायणस्मृतिः ॥

श्रीमन्तः समधिगतनिखिलशास्त्रपरमार्थतत्त्वाः शताधिकग्रन्थनिर्मातॄणामद्वैतविद्याचार्यवर्याणां श्रीमदप्पय्य यज्वेन्द्राणां सोदर्यपौत्राः **श्रीमन्नीलकण्ठदीक्षितवर्याः** करुणाविष्टहृदयाः प्रणिन्युः सर्वेषामनायासेन भक्तिमार्गप्रदर्शकं सरसतामापाद्य प्रवर्तकं च अज्ञानान्ध्यनिवारकमतिमनोहरं ग्रन्थजातम् । तस्मिन्नन्यतमोऽयं **शान्तिविलासाभिधो** ग्रन्थः । अत्र च परमपुरुषार्थसाधनीभूता कामादिषडरिविनिग्रहजन्या शान्तिरेव प्राथम्येन वर्ण्यते । तदङ्गभूता सर्वेश्वरभक्तिश्च पौष्कल्येन निरूप्यते । विरक्ततमाः श्रीमन्तः काश्मीरिकाः काशीवासिनो लोष्टदेवाः शान्तिमनुपमां स्वयं प्राप्यापि लोकशिक्षणायैवं विलपन्ति :—

**घोरे क्षणं विनिपतन्नरके क्षणं च**
**पुण्यं पदं दिविषदां सहसाऽधिरोहन् ।**
**मोहेन कन्दुकदशामिव नीयमानः**
**स्वामिन् सहे किमवधीनि गतागतानि ॥**

दीनाक्रन्दने श्लोकः ४.

अमी तु दीक्षितेन्द्राः सचिवाग्रपदे स्थिताश्चेतसो विरक्तिं सुतीक्ष्णामाशासमानाः स्वात्मानमिव मधुरया रीत्या लोकान् शिक्षयन्ति अर्थकामासारतादर्शनद्वारा वर्णाश्रमधर्मानुष्ठानं ततश्चाचञ्चलां भक्तिमात्मसमर्पणं च भगवति परमेश्वरे कर्तुं 'जीर्णे रुग्णे'–२०, 'आगर्भात्'–५०, 'दण्डं धत्ते'–५१ इत्यादिभिः मधुरमधुरैः पद्यरत्नैः। स एष ग्रन्थः सांप्रतं सर्वजनोपयुक्तया रीत्या प्रचारणीय इति विचिन्त्य सरलेन द्राविड्यनुवादेन मुद्रापितः। अस्य च प्रचारणेन ग्रन्थमेनं श्रद्धया पठन्त आस्तिकाः धर्मेण भगवति भक्तिं संपाद्य तया च परमं श्रेयः प्राप्य कृतार्थीभवेयुरिति भगवन्तं भवानीवल्लभं श्रीमच्चन्द्रमौलीश्वरं संप्रार्थयामः॥

मुकाम्—उत्तमर् कोविल्,<br>
स्वभानु सं० कार्तिकशुद्धतृतीया<br>
भानुवासरः।

नारायणस्मृतिः

ஸ்ரீ:

முத்ரை

ஸ்ரீமத் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யர்களான ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர்களால் ப்ரதிஷ்டிக்கப் பெற்ற ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடாதீச்வரர்களான ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகின்றது.

ஸ்ரீமான்களாய், எல்லா சாஸ்திரங்களையும் நன்றாக உணர்ந்தவர்களாய், பரமார்த்த வுண்மைகளை அறிந்தவர்களாய், நூற்றிற்கு மேற்பட்ட நூல்களை இயற்றி அத்வைத வித்யைக்கு ஆசார்யவர்யர்களாக விளங்கிய ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதச்ரேஷ்டர்களின் ஸஹோதரரின் பௌத்திரர்களாய் விளங்கிய ஸ்ரீமத் நீலகண்ட தீக்ஷிதவர்யர்கள் கருணை குடி கொண்ட இருதயமுடையவர்களாய் எல்லோருக்கும் சிரமமின்றி பக்தி மார்க்கத்தை விளக்கிக் காட்டுபவையும் சுவையினிமையைப் பயப்பதில் முதன்மை பெற்றவையும் அஞ்ஞானமாகிய இருளை நீக்குபவையும் மிக்க மனோஹரமானவையுமான நூல்கள் பலவற்றை இயற்றியருளினார்கள். அவற்றுள் ஒன்றாகச் சிறந்து விளங்குவது ஶாந்தி விலாஸ: என்ற பெயர்கொண்ட இந் நூல். இங்கும் பரமபுருஷார்த்தத்திற்கு ஸாதனமாகிக் காமம் முதலிய ஆறு பகைகளையும் நன்கு அடக்குவதாலே உண்டாகும் சாந்தி நிலையே முதன்மை பெற வர்ணிக்கப்பட்டுள்ளது. அந்த சாந்தி நிலைக்கு அங்கமான ஸர்வேச்வர பக்தியும் பூர்ணமாக விளக்கப்பட்டுள்ளது. விரக்தர்களுக்குள் மிகச்சிறந்தவர்களாய் ஸ்ரீமான்களாய் காசி வாஸிகளாய் விளங்கிய காச்மீரத்து லோஷ்டதேவர் அவர்கள் தாம் ஒப்பற்ற சாந்தி நிலையைப் பெற்றும் உலகத்தைச் சீர்திருத்துவதற்காகவே இவ்வாறு பிரலாபிக்கிறார்கள்:

ஞோரே க்ஷணம் விநிபதன் நரகே க்ஷணம் ச
புண்யம் பலம் த்ரிவிஷலாம் ஸஹஸா'த்ரிரோஹன் |
மோஹேன கந்துகஸமாமிவ நீயமான:
ஸ்வாமின் ஸஹே கிமவரீநி முதா முதானி ||

(தீனாக்ரந்தனம். ச்லோகம் 4.)

இந்த தீக்ஷிதச்ரேஷ்டர்களோ முதல் மந்திரி பதவியிலிருந்து கொண்டே மனதிலே மிகத் தீவிரமான விரக்தியை விரும்பிய வர்களாய், தமக்கு உபதேசித்துக் கொள்பவர்போல் இனிய முறையிலே, பொருள் இன்பம் இவற்றின் ஸாரமின்மையைக் காட்டுவதாலே வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டிப்பதற்கும், அதனால் பரமேசுவரராகிய பகவானிடம் நிலைபெற்றுள்ள பக்தியையும் ஆத்ம ஸமர்ப்பணத்தையும் செய்வதற்கும், "ஜீர்ணேருதிணே" (20) "ஆமூர்ஹாத்" (50) "உண்டியத் தே" (51) என்பவை முதலான மதுர மதுரமாய்ச் சிறந்த சுலோகங்களால் உலகோர்களுக்குக் கற்பிக்கிறார்கள். அத் தகைய இந்நூல் இப்போது எல்லா ஜனங்களும் உபயோ கிக்கும்படியான முறையிலே பிரசாரம் செய்யப்படவேண்டும் என்று ஆலோசித்து ஸரளமான தமிழ் மொழி பெயர்ப்போடு அச்சிடப் பெற்றுள்ளது. இதனுடைய பிரசாரத்தால் இந் நூலை சிரத்தையோடு படிக்கும் ஆஸ்திகர்கள் தர்மவழியிலே பகவானிடத்தில் பக்தியையுடையவராகி அந்த பக்தியினால் மிகச் சிறந்த சிரேயஸையும் அடைந்து க்ருதார்த்தர்கள் ஆக வேண்டும் என்று பவானீதேவியின் நாயகரான பகவான் ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரரை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

முகாம்: உத்தமர் கோவில்,
ஸ்வபானு ஸம். கார்த்திகை
சுக்ல த்விதீயை.
பானுவாஸரம் (31-10-'43.)

நாராயண ஸ்ரௌதி:

# FOREWORD

True equipoise of mind, which is entirely unaffected by achievements or failures, can be attained only by those who cultivate detachment from things worldly, desirelessness, and renunciation (*vairagya*). This state where, in our conscious moments even, the mind is at perfect rest as in deep sleep, is called शांति. When it is united to the realization of Self and God, it is *yoga*. And by *yoga* men attain *moksha*. Acquisition of शांति is thus e very foundation for the attainment of salvation. The Lord has said in the Gita that the man without शांति has no true happiness.

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥

(Chapter II Stanza 66.)

विहाय कामान् यः सर्वान् पुमांश्चरति निस्स्पृहः ।
निर्ममो निरहङ्कारः स शान्तिमधिगच्छति ॥

(Chapter II Stanza 71.)

Many are the works in Sanskrit which stress the need for the cultivation of this supreme quality of mind and all of them enjoin that we should think constantly of the impermanence or evanescence of things material and of the world as we see it, if we are to take the road of true spiritual progress and ultimately reach the goal of eternal Bliss.

One of such works is the *Santi Vilasa* of Sri Nilakantha Dikshita, brother's grandson of the famous Appayya Dikshita. It consists of 51 verses, and though it cannot be classed among the first-rate compositions for felicity of poetic diction or sublimity of thought, it is well worth study as a production of one of our great men of the early part of the 17th century, who was at once a

poet, philosopher and statesman and whose *Champu* and *Siva Leelarnava* have earned for themselves imperishable fame. As regards richness of ideas or poetical merit, it cannot claim equal rank with the *Bhaja Govinda* slokas of Sri Sankara, or even the *Vairagya Sataka* of Bhartrihari. But it deserves praise, as a short philosophical work by a reputed author, who draws pointed attention to the vanity and futility of all human effort and holds up things spiritual and eternal as the only objects worthy of pursuit. His theme is that even men of much learning are carried away by sensual objects and vainly spend their lives in quest of material prosperity and worldly pleasures, missing the true purpose or aim of life, namely, the attainment of freedom from the bondage of *samsara* by steadfast and one-pointed devotion to God.

The present publication forms part of the Sri Kamakoti Granthavali series and gives for the benefit of those not well acquainted with Sanskrit a word-for-word Tamil meaning of the slokas and their gist or purport. The Tamil renderings are generally accurate and the condensed statements bring out in clear outline the aim or object of each verse.

His Holiness the Sri Jagadguru of the Kanchi Kamakoti Pitha has been unremitting in his toil for the spread of true Hindu religion and culture in this land; and one of the ways he has chosen for carrying out his life's mission is the encouragement of the publication of such works as the one under notice, so that large numbers of the Hindu population might benefit by their study. Blessed by so great and holy a personage, there can be little doubt that the attempt to popularise by such means the sublime ideals of the Hindu philosophy and religion will prove a great success.

*11th November 1943*
MADRAS.

N. CHANDRASEKHARA AIYAR.

# முன்னுரை

காரிய சித்தியைப் பெற்றாலும் பெறுவிட்டாலும் அதனால் பாதிக்கப்படாமல் உண்மையான நடுநிலைபெற்றுச் சலியாது நிலைத்த மனமானது லௌகிக விஷயங்களிலே பற்றின்மையும் நிராசையும் வைராக்கியமும் பயின்றவர்களுக்கு மட்டுமே ஸித்திக்கக்கூடும். ஸுஷுப்தி என்னும் காட நித்திரையிலே போல் விழித்திருக்கும் போதும் மனமானது முற்றும் நிச்சலமாய் இருக்கும் இந்த நிலையே 'சாந்தி' என்னப்படுவது. ஆத்மானுபவத்தோடும் கடவுளோடும் இந்நிலை பொருந்தும்போது, அதனையே யோகம் என்பர். யோகத்தாலேயே மானுடர் மோக்ஷத்தை யடைகிறார்கள். எனவே சாந்தியைப் பெறுவதானது மோக்ஷமடைவதற்கு நேரான அடிப்படையாகின்றது. ஸ்ரீ கீதையிலே, பகவான் "சாந்தியில்லாதவனுக்கு உண்மைச் சுகம் இல்லை." என்று சொல்லியிருக்கிறார்.

நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவநா |
ந சாபாவயதஃ ஶாந்தி ரஶாந்தஸ்ய குதஃ ஸுகம் |
(II-ம் அத்யாயம், ஶ்லோகம் 66.)

விஹாய காமான்யஃ ஸர்வான் புமாம்ஶ்சரதி நிஸ்ஸ்ப்ருஹஃ |
நிர்மமோ நிரஹங்காரஃ ஸ ஶாந்தி மதிகச்ச்ஹதி ||
(II-ம் அத்யாயம், ஶ்லோகம் 71.)

இச்சிறந்த மனோதர்மத்தை நாம் பயிலவேண்டிய அவசியத்தை வற்புறுத்தும் நூல்கள் வடமொழியிலே பல உள்ளன; உண்மையான ஆத்யாத்மிக மார்க்கத்திலே சென்று இறுதியிலே நித்தியமான பேரானந்தமாகிய லக்ஷ்யத்தை அடையவேண்டுமென்றால் நாம் காணும் உலகமும் பௌதிகப் பொருளும் அநித்யமானவை அதாவது நிலையாதவை என்பதை நாம் எப்பொழுதும் சிந்திக்கவேண்டும் என்றே அவையெல்லாம் நியமிக்கின்றன.

இவ்வகை நூல்களில் ஒன்று, புகழ்பெற்ற ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்களின் ஸஹோதரருடைய பௌத்திரரான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் "ஶாந்தி விலாஸஃ" என்பது. இது 51 ச்லோகங்கள் கொண்டது; பத லாளித்யத்திலோ அர்த்த கௌரவத்திலோ முதல் வகுப்பு நூல்களோடு இதைச் சேர்த்துக்கொள்ளாவிட்டாலும், 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே வாழ்ந்த நம்முடைய பெருந்தகையார்—கவியாகவும், தத்வ ஞானியாகவும், ராஜதந்திரியாகவும், அழியாப் புகழ்படைத்த "சம்பு" வையும் "ஶிவலீலார்ணவம்" என்னும் காவியத்தையும்

இயற்றியவராகவும் விளங்கியவர்—அவர் இயற்றிய நூல் என்பதால் நாம் ஊன்றிக் கற்பதற்கு உரியதேயாகும்.

கருத்துக்களின் சிறப்பிலோ கவிதையிலோ இந்நூலை ஸ்ரீ சங்கரர் அருளிய 'பஜகோவிந்த' ச்லோகங்களுக்கு, இன்றேல் "பர்த்ருஹரி" யின் வைராக்ய சதக ச்லோகங்களுக்குக்கூட ஸமானமாகக் கொள்ள முடியாதென்றாலும், மனிதப் பிரயத்னமெல்லாம் வீண் என்றும் பயனற்றது என்றும் நன்றாக எடுத்துக்காட்டி, முழுக்கருத்தோடு முயற்சி செய்து பெற விரும்புவதற்குரியது நித்தியமான அத்யாத்மப் பொருளே என்று விளக்குவதாய், பிரஸித்திபெற்ற நூலாசிரியர் சிறிய அளவில் அமைந்ததோர் தத்துவ நூல் என்பதால் இதுவும் புகழ்ச்சிக்கு உரியதே. இந்தக் கவி கூறும் விஷயம் என்ன என்றால், கல்வியில் மிக்கார்கூட இந்திரிய விஷயங்களாலே அபகரிக்கப்பட்ட சித்தத்தையுடையவர்களாய் பொருட்செல்வத்தையும் உலக இன்பங்களையும் நாடித்திரிந்தும், கடவுளிடம் ஊன்றி நிலைத்து ஏகாக்கிரமாக பக்தி செய்வதால் ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுதலை பெறுவது என்னப்படும் வாழ்க்கையின் உண்மையான கருத்தையும், லக்ஷ்யத்தையும் கைவிடுத்தும், தங்களுடைய வாழ்நாட்களை வீணாக செலவிடுகின்றார்கள் என்பதே.

இப்போது பதிப்பிக்கப்படும் இந்நூலானது ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளியைச் சேர்ந்தது. ஸம்ஸ்க்ருதத்தில் நல்ல பழக்கமில்லாதவர்களின் சௌகர்யத்திற்காக ஒவ்வொரு ச்லோகத்திற்கும் தமிழிலே பதவுரையும் கருத்தை விளக்கும் பொழிப்புரையும் கொடுக்கப் பெற்றுள்ளன. தமிழ் உரை பொதுவாக திருத்தமாகவே உள்ளது. சுருக்கவுரையாக அமைந்த பொழிப்புரை ஒவ்வொரு ச்லோகத்தின் கருத்தையும் நோக்கத்தையும் தெளிவாகக் காட்டுகின்றது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் உண்மையான ஹிந்து மதத்தையும் நாகரிகத்தையும் இந்நாட்டில் எங்கும் பரவச் செய்யும் காரியத்திலே இடைவிடாத உழைப்புடையவர்களாய் விளங்குகிறார்கள். தம்முடைய ஜீவியலக்ஷ்யமாகக்கொண்ட இக்காரியத்தை நிறைவேற்றுவதற்கான வழிகளிலே ஒன்றாக பிரஸ்தாவ நூலைப் போன்ற நூல்களைப் பிரசுரிப்பதற்கு உத்ஸாஹமூட்டுவதைக் கைக்கொண்டுள்ளார்கள். இதனால் ஹிந்து ஜனங்களில் பெரும்பான்மையோர் இந்நூல்களைக் கற்றுப் பயனடைவார்கள் அன்றோ! இத்தகைய பெருமையும் தூய்மையுமுடையவர்களின் கிருபையால் ஹிந்து தத்துவங்களிலும் மதவுண்மைகளிலும் சிறந்து விளங்கும் உயர்ந்த லக்ஷ்யங்களை எல்லோரும் அறியும்படி பிரசாரஞ் செய்கின்ற இவ்வித முயற்சியானது பெரு வெற்றி பெறும் என்பதில் சிறிதும் ஸந்தேஹம் இல்லை.

மதராஸ்
11—11—'42. } என். சந்த்ரசேகர அய்யர்.

# ஸ்ரீ சாந்தி விலாஸ:

## உபோத்காதம்

மனம் அடங்கிய நிலை சாந்தி நிலை; அது பேரின்பத்திற்கு வாயிலாகும் ஓர் ஸுகநிலை. மனம் அடங்குவதாவது, அது இந்திரியங்களுக்கு வசமாகாமல் உள் நோக்குவது. மனதின் சுபாவம் இந்திரியங்களுடன் வெளியில் ஓடித் திரிவதே. இந்தக் கூட்டுறவினால் அதற்கு அனேக பந்தங்கள் ஏற்படுகின்றன. இந்திரியங்கள் மனதின் ஸுகத்திற்கு உத்திரவாதிகளல்ல. அவைகளின்மூலம் பல பந்தங்களில் சிக்கிக்கொண்டு மனம் துன்புறுகின்றது. அதை இந்திரியங்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்பொருட்டு புத்தி முன் வருகிறது. "மனமே! நீ இந்திரியங்களுடன் கூட்டுறவு செய்தது போதும். அவைகளால் நீ அடைந்த ஸுகம் என்ன? நீ ஸுகமென்று மதித்ததெல்லாம் துக்கமாய் முடிந்தது. நீ ஹிதமென்று எண்ணியதெல்லாம் அனர்த்தமாக முடிந்தது, நீ வைத்த ஆசையெல்லாம் பாசமாகி உன்னையே இறுகச் சுற்றிக்கொண்டு வருத்துகின்றது. இந்தப் பாசங்களை அறுத்துவிடு. பொய்த்தோற்றமுள்ள இந்திரிய ஸுகங்களை மறந்துவிடு. உண்மையான ஸுகம் வேறு. நீ எனக்கு அடங்கி உள் நோக்குவாயானால் அதைக் காணலாம்" என்று புத்தி மனதிற்கு உபதேசம் செய்கிறது. இந்த ஸந்தர்ப்பத்திலேதான் சாந்தி விலாஸம் உற்பத்தியாகிறது. எந்த ஜீவனுடைய அனுபவத்திலும் ஆயுளில் ஒரு க்ஷணமாவது இவ்வறிவு தோன்றாமலிராது. மஹாத்மாக்களுக்கு இவ்வுணர்ச்சி இடைவிடாது பிரகாசிக்கின்றது.

சாந்தி விலாஸத்திற்கு அர்த்தம், காமம் என்ற இரண்டும் பகை. அர்த்தகாமங்களால் ராகம், த்வேஷம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் முதலிய சித்த தோஷங்கள் உண்டாகி, மனதிற்கு நிரந்தரமான சஞ்சலத்தையும் துன்பத்தையும் தருகின்றன. இவைகளை நீக்கி மனதை சுத்திசெய்துகொள்ள வேண்டும். இந்த சுத்தியானது, மனம் இந்திரியங்களுக்கு வசப்பட்டிருக்கும் வரை ஏற்படாது. இந்திரியங்களோ மனதை ஒருக்ஷணமும் விடாமல் வாரிக்கொண்டுபோய் விடுகின்றன. ஆதலால் மனதை மீட்க இந்திரியங்களை க்லேசப்படுத்த

வேண்டி வருகிறது. அதற்கும் அஞ்சாமல் புத்தியின் தலைமையின் கீழ் ஜீவன் மனதைத் தன் வசப்படுத்திக்கொண்டு ஆத்ம ஸுகத்தைத் தேடவேண்டும். ஆனால், மனமும் இந்திரியங்களும் செய்யும் கோலாஹலத்தில் புத்தி விலக்கப்பட்டுத் துயிலில் அமர்ந்துவிடுகிறது, அதைத் தட்டி எழுப்பித் தத்தளிக்கும் ஜீவனுக்கு உதவிபுரியும் ஒரு தூண்டுகோலாக, இந்த பாாந்தி விலாஸம் என்ற சிறு காவியம் ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் என்ற மஹானால் லோகோபகாரமாக எழுதப்பட்டது. அவர் இக்காவியத்தில் தம் அக்ஞானத்தையும், தாம் மதிகெட்டுப் போனதையும், தம் பாபச்செயல்களையும்பற்றி இகழ்ந்து பேசிக்கொள்வதெல்லாம் நம்மை உத்தேசித்தேயொழிய உண்மையில். விரக்தரும், ஞானியும், புண்ணிய புருஷருமான அவரிடம் அவை சிறிதும் அணுகா. இக்காவியத்தில் அவர் தம் சுய அனுபவத்தைச் சொல்லுவதுபோல சொல்லுவது ஒரு நயமான உபதேச மார்க்கம். இதை வாசிப்பவர் ஒவ்வொருவரும் தத்தம் அனுபவங்களையும் ஒத்துப் பார்த்துக்கொண்டு பயன்பெற வேண்டுமென்பது கருத்து. இப்படியல்லாமல், "நீ இவ்விதம் செய்" என்று உபதேசிப்பது சாஸ்திரத்தின் முறை, காவியமுறை யாகாது. சாஸ்திர விதிகளில் சோம்பேறிகளுக்கும், மூர்க்கர்களுக்கும், உத்ததர்களுக்கும் சிரத்தையுண்டாகாது; காவியமோ இத்தகையோரையும் தன் இனிய மொழிகளால் கவர்ந்து நல்வழிக்கு இழுக்கின்றது. கவி இங்கு அர்த்தகாமங்களின் கோரமான ரூபத்தை எடுத்துக் காட்டி அவைகளில் வெறுப்புவரக்கூடிய பரிபாகத்தைப் படிப்போர் மனதிற்குப் புகட்டவேண்டித் தாம் புலம்புவதுபோல் புலம்புகிறார். இதனை வாசிக்கும் விவேகிகளும் கவி புலம்புகிறார் என்பதை மறந்து, தாங்கள் புலம்பியதாகவே அனுபவத்தில் கண்டுகொள்வார்கள் என்பது திண்ணம். இந்திரியங்களாகிற திருடர்கள் வந்து மனதைக் கொள்ளைகொண்டு போகும்போது அலறும் ஜீவனுக்கு உதவாமல் தூங்கும் நம் புத்தியின் மயக்கத்தைத் தெளியவைப்பதற்காக இக்காவியத்தை இயற்றிய கருணைக்கடலாகிய இந்த மஹானுடைய சரித்திரத்தை ஆனந்த ஸாகர ஸ்தவத்தின் முன்னுரையில் வரைவோம்.

திருவாலங்காடு
23—10—43

**Y. மஹாலிங்க சாஸ்திரி.**

॥ ओं ॥

महाकवि श्रीनीलकण्ठदीक्षित विरचितः

# ॥ श्रीशान्तिविलासः ॥

ஓம்

மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய

# ஸ்ரீ சாந்தி விலாஸ:

वंशे कस्मिन्नजनिषि कयोः पुत्रतामग्रहीषं
कत्यश्रौषं तदपि कतिधा तच्च सद्भ्यः कतिभ्यः ।
किं नाद्राक्षं व्यसनमपि वा किं सुखं नान्वभूवं
नोपारंसीत्तदपि हृदयं कीदृशो मे विपाकः ॥ १ ॥

வம்ஶே கஸ்மின்னஜனிஷி கயோ꞉ புத்ரதாமக்ரஹீஷம்
கத்யஶ்ரௌஷம் தத³பி கதிதா⁴ தச்ச ஸத்³ப்⁴ய꞉ கதிப்⁴ய꞉ |
கிம் நாத்³ராக்ஷம் வ்யஸனமபி வா கிம் ஸுக²ம் நான்வபூ⁴வம்
நோபாரம்ஸீத்தத³பி ஹ்ருத³யம் கீத்³ருஶோ மே விபாக꞉ ॥ (1)

**कस्मिन् वंशे** எந்த வம்சத்தில் **अजनिषि** பிறந்தேன். **कयोः** எந்த மாதா பிதாக்களுக்கு **पुत्रताम्** புத்ரனயிருத்தலை **अग्रहीषम्** அடைந்தேன். **कति अश्रौषम्** எவ்வளவு (நல்ல விஷயங்களை) கேட்டிருக்கிறேன். **तदपि कतिधा** அதுவும் எத்தனை விதமாக. **तच्च कतिभ्यः सद्भ्यः** அதுவும் எத்தனை பெரியோர்களிடமிருந்து. **व्यसनम्** கஷ்டத்தை **किं नाद्राक्षम्** பார்க்கவில்லையா? **सुखमपि वा** ஸுகத்தையும்தான் **किं नान्वभूवम्** நான் அனுபவிக்கவில்லையா? **तदपि** ஆனாலும் **हृदयं**

**नोपारंसीत्** மனம் அடங்கவில்லையே. **मे विपाकः कीदृशः** என் முதிர்ச்சி எவ்விதமானது?

நான் பரிசுத்தமான வம்சத்தில் பிறந்தேன். மஹாத்மாக்களான மாதா பிதாக்களுக்கு புத்திரனானேன். எவ்வளவோ அரிய பெரிய விஷயங்களை எவ்வளவு தடவையோ எத்தனையோ பெரியோர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டேன். உலக வாழ்க்கையில் சுகம் துக்கம் எல்லாம் பார்த்தாகி விட்டது. இன்னமும் என் மனம் சாந்தியை பெறவில்லை என்றால் என் பரிபாகம் மிகவும் இகழத்தக்கதே.

குறிப்பு :—ஸ்ரீமான் நீலகண்ட தீக்ஷிதர் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் தம்பி பேரன். ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்களுக்கு பூமிதேவியிடம் பிறந்தவர். வேங்கடமகி, கீர்வாண யோகீந்திரர் முதலியவர்களின் சிஷ்யர். மதுரையில் திருமலை நாயகருக்கு மந்திரி பதவி வஹித்தவர்.

**पादौ मे स्तः परमचतुरौ कीकटानेव गन्तुं**
**वागप्यास्ते निभृतमनृतान्येव वक्तुं वचांसि ।**
**मीमांसन्ते मम च मतयो दोषदृष्टौ परेषां**
**पङ्गुर्मूकः पशुरपि भवाम्यात्मनीने तु कृत्ये ॥ २ ॥**

பாதௌ மே ஸ்த: பரமசதுரௌ கீகடானேவ கந்தும்
வாகப்யாஸ்தே நிப்ருதமந்ருதாந்யேவ வக்தும் வசாம்ஸி |
மீமாம்ஸந்தே மம ச மதயோ தோஷத்ருஷ்டௌ பரேஷாம்
பங்குர்மூக: பஶுரபி பவாம்யாத்மநீநே து க்ருத்யே ॥ (2)

**मे** என் **पादौ** கால்கள் **कीकटान् एव** சந்து வழிகளிலேயே **गन्तुं** செல்வதற்கு **परमचतुरौ** மிக்க திறமையுள்ளவைகளாக **स्तः** இருக்கின்றன. **निभृतम्** கள்ளத்தனமாக **अनृतानि** பொய்யான **वचांसि एव** மொழிகளையே **वक्तुम्** உரைப்பதற்கு **वागपि आस्ते** பேசும் திறமையும் இருக்கிறது. **मम** எனது **मतयश्च** யோசனைகளும் **परेषां** பிறருடைய **दोषदृष्टौ** தோஷங்

களைக் கண்டுபிடிப்பதில் **मीमांसन्ते** ஆழ்ந்த கருத்துடைய வைகளாயிருக்கின்றன. **आत्मनीने** நான் நலம்பெற உதவும் **कृत्ये तु** காரியத்திலோ **पङ्गुः** முடவனாயும் **मूकः** ஊமையாயும் **पशुरपि** நாற்கால் ஜந்துவாயும் (அஃறிணைப் பொருளாயும்) **भवामि** இருக்கிறேன்.

மனோ வாக் காயங்களால் நான் தீய விஷயங்களையே நாடினேனே யொழிய நல்ல காரியங்களைச் செய்யவில்லை. கெட்ட பாதைகளில் ஸாமர்த்தியமாய் ஸஞ்சாரம் செய்தேன். யாரும் அறியாவண்ணம் பொய்யுரையாடுவதில் திறமைவாய்ந்த வாக்கு எனக்கு உண்டு. என் புத்தியோ பிறர் பிழையை ஆராய்ந்தறிவதில் வெகு தீவ்ரமாக வேலை செய்கிறது. ஆனல், என் நல்ல கதிக்கான காரியங்களுக்கு, நான் முடவனாயும், ஊமையாயும், மிருகமாயும் ஆனேன்.

குறிப்பு:-சரீரத்தினல் தேவஸேவை குருஸேவைகளையும், வாக்கினல் ஸத்திய விரதத்தையும், மனதினல் ஈச்வர தியானத்தையும் அனுஷ்டித்து என்னுடைய பரலோக ஹிதத்தைத் தேடிக்கொள்ளவில்லை.

यामाराद्धुं न गणितमिदं जीवितं वा धनं वा
यस्याः प्रीतिर्मनसि कलिता ज्यायसी मोक्षतोऽपि ।
सैवेदानीं वयसि चलिते संप्रहीणे च वित्ते
तूलयापि त्रिपुरहर मां मन्यते नैव भार्या ॥ ३ ॥

யாமாராத்⁴ தும் ந க³ணிதமிதம் ஜீவிதம் வா த⁴னம் வா
யஸ்யா: ப்ரீதிர் மனஸி கலிதா ஜ்யாயஸீ மோக்ஷதோ'பி ।
ஸைவேதா³னீம் வயஸி சலிதே ஸம்ப்ரஹீணே ச வித்தே
தூலயாபி த்ரிபுரஹர மாம் மந்யதே நைவ பா⁴ர்யா ॥ (3)

**याम्** எவளை **आराद्धुं** திருப்தி செய்து வைப்பதன் பொருட்டு **इदम्** இந்த **जीवितं वा** உயிரோ **धनं वा** செல்வமோ **न गणितम्** (பெரிதெனப்) பாராட்டப்படவில்லையோ, **यस्याः** எவளுடைய **प्रीतिः** அன்பு **मोक्षतोऽपि** மோக்ஷத்தைக் காட்டி

ஓம் **ज्यायसी** பெரிதாக **मनसि** மனதில் **कलिता** கருதப் பட்டதோ, **सा एव भार्या** அதே மனைவி **इदानीम्** இப்பொழுது **वयसि** வயதும் **चलिते** சென்று **वित्ते च** செல்வமும் **संप्रहीणे** குறைந்தவுடன் **त्रिपुरहर** ஏ ஈச்வர (திரிபுரங்களை யெரித்த வரே)! **मां** என்னை **तूलाय अपि** இலவம்பஞ்சிற்குச் சமான மாகக் கூட **नैव मन्यते** மதிக்கவேயில்லை.

உயிரையும் பணத்தையும் லக்ஷியம் செய்யாமல் எவளைத் திருப்தி செய்வித்து வந்தேனோ, எவள் காட்டும் அன்பை மோக்ஷசுகத்திற்கு மேற்பட்ட சுகம் கிடைத்தது என்று எண்ணியிருந்தேனோ, அந்தப் பெண்டாட்டியே இப்போது பணமும் குறைந்து வயதும் ஆகிவிட்டபடியால் என்னைப் பஞ்சிற்கும் தாழ்ந்தவன் என்று நினைக்கிறாள். ஈச்வரா! நான் என்ன செய்வேன்?

कृत्वा पापान्यपि खलु मया पोषिताश्शैशवे ये
निद्राहारावपि विजहता शिक्षिता ये कलासु ।
प्रादुर्भूतास्स्वयमिव हि ते प्राक्तनादृष्टलब्ध-
प्रज्ञोन्मेषा इव च तनया न स्मरन्त्यात्मनोऽपि ॥ ४ ॥

க்ருத்வா பாபாந்யபி க²லு மயா போஷிதாஶ்ஶைஶவே யே
நித்³ராஹாராவபி விஜஹதா ஶிக்ஷிதா யே கலாஸு |
ப்ராது³ர்பூ⁴தாஸ் ஸ்வயமிவ ஹி தே ப்ராக்தநாத்³ருஷ்டலப்³த⁴-
ப்ரஜ்ஞோந்மேஷா இவ ச தநயா ந ஸ்மரந்த்யாத்மனோ'பி || (4)

**पापान्यपि खलु** பாவச் செயல்களையும் **कृत्वा** செய்து **मया** என்னால் **ये** எவர்கள் **शैशवे** இளமைப் பருவத்தில் **पोषिताः** வளர்க்கப்பட்டார்களோ, **निद्राहारौ अपि** தூக்கம் ஊண் இவற்றையும் **विजहता** துறந்த (என்னால்) **ये** எவர்கள் **कलासु शिक्षिताः** வித்யாப்யாஸம் செய்விக்கப்பட்டனரோ, **ते हि तनयाः** அந்தப்பிள்ளைகளோ என்றால் **स्वयं** தாமாகவே **प्रादुर्भूता इव** உதித்தவர்கள் போலவும் **प्राक्तनादृष्टलब्धप्रज्ञोन्मेषा**

**इव च** ஜன்மாந்தர புண்ணியத்தால் கிடைத்த புத்தி மலர்ச்சியை யுடையவர்கள் போலவும் (பாவித்துக்கொண்டு) **आत्मनोऽपि** தங்களையே **न स्मरन्ति** மறந்திருக்கின்றனர்.

பாபத்தொழில்களைப் புரிந்து பணம் சம்பாதித்து எந்தப்புத்திரர்களை வளர்த்தேனோ, எவர்களுக்கு மிக்க சிரத்தையெடுத்துக்கொண்டு என் சரீர சிரமத்தையும் பார்க்காமல் வித்யாப்யாஸம் செய்வித்தேனோ, அந்தப் புத்திரர்கள் தாங்களே ஆகாயத்திலிருந்து குதித்தவர்கள் போலவும் ஜன்மாந்தர வாஸனையாலேயே தாங்கள் வித்வத்தை யடைந்தவர்கள் போலவும் தங்களை பாவித்துக்கொண்டு நன்றிமறந்தவர்களாய் இருக்கிறார்கள்.

**दाराः पुत्राः परमसुहृदो बान्धवाः किंकरा वा**
**स्वप्नावस्थास्वपि च विरहं ये मया न क्षमन्ते ।**
**अत्यासन्ने तपनतनयस्याज्ञया दूतवर्गे**
**तेष्वेकोऽपि स्मरहर न मे गन्तुमन्वास्ति जन्तुः ॥ ५ ॥**

தாராঃ புத்ராঃ பரமஸுஹ்ருதோ பாந்தவாঃ கிங்கரா வா
ஸ்வப்நாவஸ்தாஸ்வபி ச விரஹம் யே மயா ந க்ஷமந்தே |
அத்யாஸன்னே தபநதநயஸ்யாஜ்ஞயா தூதவர்கே
தேஷ்வேகோ’பி ஸ்மரஹர ந மே கந்துமந்வஸ்தி ஜந்துঃ ॥ (5)

**ये दाराः** எந்த பார்யை **पुत्राः** புத்திரர்கள் **परमसुहृदः** நெருங்கிய நண்பர்கள் **बान्धवाः** பந்துக்கள் **किंकराः वा** அல்லது சேவகர்கள் **स्वप्नावस्थासु अपि** ஸ்வப்னத்திலே கூட **मया विरहं** என் பிரிவை **न क्षमन्ते** ஸஹிக்கமாட்டார்களோ, **स्मरहर** ஏ ஈச்வர (மன்மதனை எரித்தவரே)! **तेषु एकोऽपि जन्तुः** அவர்களில் ஒரு பிராணிகூட **तपनतनयस्य** (சூரியனின் புத்திரனை) யமனின் **आज्ञया** கட்டளையினால் **दूतवर्गे** தூதர்கள் **अत्यासन्ने** கிட்ட நெருங்கும் தருணத்தில் [**अद्य आसन्ने** என்றும் பாடம், பொருள் ‘இப்போது கிட்ட நெருங்குகையில்’] **अनुगन्तुम** பின்தொடர்வதற்கு **मे** எனக்கு **नास्ति** இல்லை.

பிள்ளை, பெண்டாட்டி, பந்துமித்திரர்கள் முதலியவர்கள் என்மேலுள்ள அபிமானத்தால் என்னைவிட்டுப் பிரியமாட்டார்கள் என்றாலும், யமதூதர்கள் வந்து என்னை அழைக்கும்போது அவர்களில் ஒருவர்கூட என்பின்னே வரமாட்டார்கள்.

**குறிப்பு**:—'ஸ்மரஹர' என்றதால் காமனை யொழித்த நீரே என்னுடைய மோஹாதிகளை நீக்கி நற்கதியளித்துக் காக்கவேண்டும் என்பது தோன்றும்.

**राज्ञो भृत्या यदि परिचिता देशिकस्यैष लाभो**
**राजद्वारे यदि खलु गतं नैमिशे तत्प्रविष्टम् ।**
**राजा दृष्टोऽथ च यदि परं ब्रह्म साक्षात्कृतं त-**
**त्त्यक्तो देहो यदि नृपकुले मादृशां सोऽपवर्गः ॥ ६ ॥**

ராஜ்ஞோ ப்₄ருத்யா யதி₃ பரிசிதா தே₃ஶிகஸ்யைஷ லாபோ₄
ராஜத்₃வாரே யதி₃ க₂லு க₃தம் நைமிஶே தத்ப்ரவிஷ்டம் |
ராஜா த்₃ருஷ்டோ'த₂ ச யதி₃ பரம் ப்₃ரஹ்ம ஸாக்ஷாத்க்ருதம் தத்-
த்யக்தோ தே₃ஹோ யதி₃ ந்ருபகுலே மாத்₃ருஶாம் ஸோ'பவர்க₃:(6)

**मादृशाम्** என் போன்றவர்களுக்கு **राज्ञः** அரசனுடைய **भृत्याः** வேலைக்காரர்கள் **परिचिताः यदि** பழகியவர்களானால் **एषः** இதுவே **देशिकस्य लाभः** ஸத்குருவையடைந்ததாகின்றது. **यदि खलु राजद्वारे गतम्** அரசன் இருப்பிடத்தின் வாயிலில் புகுந்துவிட்டாலோ **तत्** அதுவே **नैमिशे प्रविष्टम्** நைமிசாரண்ய ப்ரவேசமாகும். **अथ च** இன்னமும் **राजा यदि दृष्टः** அரசனை தரிசனம் செய்துவிட்டாலோ **तत्** அதுவே **परं ब्रह्म साक्षात् कृतम्** பரப்பிரும்மத்தைக் கண்ணெதிரிலே கண்டதாகும். **नृपकुले** ராஜக்ருஹத்தில் (ஸேவையில்) **यदि देहः त्यक्तः** சரீரம் விட்டகன்றால் **सः अपवर्गः** அதுவே மோக்ஷமாகும்.

ராஜஸேவை செய்துகொண்டிருந்த எனக்கு, அரண்மனை உத்யோகஸ்தர்களின் நட்பே குருவையடைதல்; அரண்மனை வாசலில் நுழைதலே நைமிசாரண்யம் புகுதல்;

ராஜதரிசனமே பிரும்ம ஸாக்ஷாத்காரம்; அரசன் வீட்டில் பிராணனை விடுவதே மோக்ஷமாகும்.

பிரும்ம ஸ்வரூபத்தை யுபதேசம் செய்யும் ஸத்குருவை யடைந்து உபதேசம் பெற்று, புண்ணியாத்மாக்கள் இருக்கும் நைமிசாரண்யத்தில் தியான ஸமாதியை ஸாதித்து, பிரும்மத்தை யறிந்து முக்தனாக ஆகவேண்டியிருக்க, நான் ராஜஸேவையைப் பெரிதாக எண்ணி காலங்கழித்து விட்டேன் என்று பரிதபிக்கின்றார் கவி.

நைமிசாரண்யம்—மஹாத்மாக்கள் வசிக்குமிடம்; அங்கு பாரதம் முதலிய புண்ய கதைகளைச் சொல்லிக்கொண்டு, அவர்கள் ஞான வைராக்யங்களை ஸாதிப்பார்கள்.

यत्तीर्थानामटनमथ यत्पूजनं देवताना-
मिष्टापूर्तव्यसनमपि यद्यच्च दाक्ष्यं कलासु ।
अर्थप्राप्त्यौपयिकमखिलं जायते मादृशां त-
त्ते चाप्यर्था धरणिशरणा भूमिभृत्सात्कृता वा ॥ ७॥

யத்தீர்தா²நாமடநமத² யத்பூஜநம் தே³வதாநா-
மிஷ்டாபூர்(த்)தவ்யஸநமபி யத்³யச்ச தா³க்ஷ்யம் கலாஸு |
அர்த²ப்ராப்த்யௌபயிகமகி²லம் ஜாயதே மாத்³ருஶாம் தத்-
தே சாப்யர்தா² த⁴ரணிஶரணா பூ⁴மிப்⁴ருத்ஸாத்க்ருதா வா ‖ (7)

**मादृशाम्** என்போன்றவர்களுக்கு **यत् तीर्थानाम् अटनम्** தீர்த்தாடனமென்ன **यत् देवतानां पूजनम्** தெய்வ பூஜையென்ன **यत् अपि इष्टापूर्तव्यसनम्** யக்ஞம் செய்தல் குளம் வெட்டுதல் முதலியனவற்றில் ஆவல் அடைவதென்ன **यच्च कलासु दाक्ष्यम्** வித்யைகளில் ஸாமர்த்தியமென்ன **तत् अखिलम्** அவ்வளவும் **अर्थप्राप्त्यौपयिकम्** பணம் ஸம்பாதிப்பதற்கே உபாயமாக **जायते** ஆகின்றது; **ते चापि अर्थाः** அந்தப் பணங்களோ **धरणिशरणाः** பூமியில் அடைக்கலம்; **भूमिभृत्सात्कृताः वा** பூமியை யாள்பவருக்காவது அர்ப்பணம்.

பணத்தைப் பிரதானமாக எண்ணும் என் போன்றவர்களுக்கு க்ஷேத்திரங்களைச் சுற்றுவது, பகவானைப் பூஜிப்பது

யக்ஞம் செய்வது, குளம் வெட்டுவது முதலிய தரும காரியங்கள் செய்வதும், சாஸ்திரப்பயிற்சி முதலிய யோக்யதையும், பணத்தை ஸம்பாதிப்பதற்கு உபாயமாயிற்றே தவிர, ஆத்மார்த்தமாகப் பிரயோஜனப்படவில்லை. அப்படிச் சேர்த்த பணம் தான் என்ன வாயிற்று? பூமியில் (திருடர்களுக்கு பயந்து) புதைக்கப்பட்டது; அல்லது, அரசர்களுக்கு (காணிக்கையாகவோ பறிமுதல் செய்யப்பட்டோ) அர்ப்பணம் செய்யப்பட்டது.

குறிப்பு :—இக்கலியில், நற்காரியங்களைச் செய்து ஈசுவரர்க்கு அர்ப்பணஞ் செய்யாமல் நற்காரியங்களைக்கொண்டே பணம் சம்பாதிக்க எத்தனிக்கிறார்கள்; அது புத்தியீனம் என்பது கருத்து.

आकौमाराद्गुरुचरणशुश्रूषया ब्रह्मविद्या-
स्वास्थायास्थामहह महतीमार्जितं कौशलं यत् ।
निद्राहेतोर्निशिनिशि कथाः शृण्वतां पार्थिवानां
कालक्षेपौपयिकमिदमप्याः कथं पर्यणंसीत् ॥ ८ ॥

ஆகௌமாராத் குருசரண ஶுஶ்ருஷயா ப்ரஹ்மவித்யா—
ஸ்வாஸ்தாயாஸ்தாமஹஹ மஹதீமார்ஜிதம் கௌஶலம் யத் |
நித்ராஹேதோர்நிஶிநிஶி கதா: ஶ்ருண்வதாம் பார்திவானாம்
காலக்ஷேபௌபயிகமிதமப்யா: கதம் பர்யணம்ஸீத் || (8)

**आकौमारात्** வாலிபப் பிராயத்திலிருந்து **गुरुचरणशुश्रूषया** குருக்களுக்குப் பணிவிடைசெய்து **महतीं** பெரிய **आस्थां** ஆவலை **आस्थाय** அடைந்து **ब्रह्मविद्यासु** வேதாந்த சாஸ்திரத்தில் **आर्जितं यत् कौशलम्** ஸம்பாதிக்கப்பட்ட யாதொரு பயிற்சியுண்டோ **इदमपि** இதுவும்கூட, **आः कथम्** அந்தோ கஷ்டம், **निद्राहेतोः** தூக்கம் வரும்பொருட்டு **निशि निशि** இரவுகளில் **कथाः** கதைகளை **शृण्वताम्** கேட்கின்ற **पार्थिवानाम्** அரசர்களுக்கு **कालक्षेपौपयिकम्** பொழுது போக்கிற்குச் சாதனமாக வல்லவா **पर्यणंसीत्** முடிந்தது.

வெகு சிரமப்பட்டு வித்யைகளை அப்யஸித்து முடிவில் அரசர்கள் தூக்கத்திற்குக் கதைசொல்லும் ரீதியில் அவை களை உபயோகித்து வருகிறோம், என்ன பரிதாபம்!

**छाया तोयं वसनमशनं वाहनं दीपिका वा**
**क्रेतुं यस्मिन् किल न सुलभं किंचिदप्येषु मर्त्यैः ।**
**तस्मिन् दूरे पथि तनुभृतां सर्वथैवाभिगम्ये**
**प्रस्थानार्हं कमपि तु विधिं घस्मरा न स्मरामः ॥ ९ ॥**

஛ாயா தோயம் வஸனமஶனம் வாஹனம் தீபிகா வா
க்ரேதும் யஸ்மின் கில ந ஸுலபம் கிஞ்சிதப்யேஷு மர்த்யைஃ
தஸ்மின் தூரே பதி தனுப்ருதாம் ஸர்வதைவாபிகம்யே
ப்ரஸ்தானார்ஹம் கமபி து விதிம் கஸ்மரா ந ஸ்மராமஃ ॥ (9)

**छाया** நிழல் **तोयम्** நீர் **वसनम्** ஆடை **अशनम्** ஆகாரம் **वाहनम्** வாகனம் **दीपिका वा** விளக்கு **एषु** இவைகளில் **किंचिदपि** ஒன்றுகூட **यस्मिन् किल** எந்த (வழியில்) இடத்தில் **क्रेतुम्** வாங்குவதற்கு **मर्त्यैः** மனிதர்களால் **न सुलभम्** முடியாதோ, **तनुभृताम्** மனிதர்களால் **सर्वथा** அவச்யம் **अभिगम्ये** செல்லவேண்டிய **तस्मिन्** அத்தகைய **दूरे पथि** நீண்ட வழியில் **प्रस्थानार्हम्** பிரயாணத்திற்கு வேண்டிய **कमपि तु विधिम्** ஒருவிதமான ஏற்பாட்டையும் **घस्मराः** தின் பதே தொழிலாகவுடைய நாம் **न स्मरामः** சிந்திக்கவில்லை.

உண்டுகளித்துவரும் நாம் ஜீவனுக்கு முக்கியமான பசி யாறுதல், தாகசாந்தி, வஸிக்க நிழல், உடை, வெளிச்சம், வாஹனம் முதலிய ஸௌகரியங்கள் இன்று இருப்பவை போல் இறந்த பின்பும் நமக்கு ஏற்படும்படியாக, தேச காலங் களை யனுஸரித்து ஸத்பாத்திரங்களில் தானம் செய்து வைக் காதது அறியாமை. இங்கு கொடுத்தால் மட்டுமே இவை அங்கு கிடைக்குமேயொழிய, அங்கு சென்று விலைக்கு வாங் கிக் கொள்ளமுடியாது. அவ்வழி செல்வதும் செல்லாததும் நம் இஷ்டப்படி அன்று, போய்த்தான் தீரவேண்டும்.

आकर्ण्यन्ते तपनतनयग्रामसंलापघोषा
मन्दं मन्दं ह्रसति निहितः कालपाशोऽपि कण्ठे ।
आपृच्छन्ते कृतजिगमिषासंभ्रमाः प्राणवाताः
नैवेदानीमपि विषयवैमुख्यमभ्येति चेतः ॥ १० ॥

ஆகர்ண்யந்தே தபனதனயக்ராமஸல்லாபகோஷா
மந்தம் மந்தம் ஹ்ரஸதி நிஹித: காலபாஶோ'பி கண்டே |
ஆப்ருச்சந்தே க்ருதஜிகமிஷாஸம்ப்ரமா: ப்ராணவாதா:
நைவேதானீமபி விஷயவைமுக்யமப்யேதி சேத: ॥ (10)

**तपनतनयग्रामसंलापघोषाः** யமபுரத்தில் தூதர்கள் பேசிக் கொள்ளும் சத்தங்கள் **आकर्ण्यन्ते** காதில் விழுகின்றன; **कण्ठे** கழுத்தில் **निहितः** போடப்பட்ட **कालपाशोऽपि** யம பாசமும் **मन्दं मन्दं** கொஞ்சம் கொஞ்சமாக **ह्रसति** குறுகி வருகிறது; [**ग्रसति** என்று பாடமானல், பொருள் 'பிடித்திழுக்கின்றது'] **कृतजिगमिषासंभ्रमाः** வெளியேறத் துடிக்கும் **प्राणवाताः** பிராணன்கள் **आपृच्छन्ते** உத்தரவு கேட்கின்றன. **इदानीम् अपि** இப்பொழுது கூட **चेतः** மனது **विषयवैमुख्यम्** சிற்றின்பப் பற்றுதலிலிருந்து ஒழிவை **न अभ्येति** அடையவில்லை.

வாஸனு பலத்தால் இந்திரிய விஷயங்களில் உழலும் சித்தத்திற்கு, யமதூதர்களின் ஆரவாரம் காதில் விழும் போதும் காலபாசம் கழுத்தை இறுக்கி நெருக்கும்போதும் பிராணன்கள் வெளிக் கிளம்பத் துடிக்கும்போதும் கூட, விரக்தி யேற்படுவதில்லை.

चक्षुष्यन्धे चलति दशने श्मश्रुणि श्वेतमाने
सीदत्यङ्गे मनसि कलुषे कम्पमाने कराग्रे ।
दूतैरेतैर्दिनकरभुवः शश्वदुद्बोध्यमाना-
स्त्रातुं देहं तदपि भिषजामेव सान्त्वं वदामः ॥ ११ ॥

சக்ஷுஷ்யந்தே சலதி தஶனே ஶ்மஶ்ருணி ஶ்வேதமானே
ஸீதத்யங்கே மனஸி கலுஷே கம்பமானே கராக்ரே |
ஏதைர்தூதைர்தினகரபுவ: ஶஶ்வதுத்போத்யமானாஸ்-
த்ராதும் தேஹம் ததபி பிஷஜாமேவ ஸாந்த்வம் வதாம: ॥ (11)

**चक्षुषि अन्धे** கண் ஒளியிழந்து **दशने चलति** பல் ஆட்டம் கண்டு **श्मश्रुणि श्वेतमाने** மீசை வெளுத்து **अङ्गे सीदति** அங்கம் சோர்வடைந்து **मनसि कलुषे** மனம் கலங்கி **कराग्रे कम्पमाने** நுனிக்கை நடுக்கமுற்றுப் போன போது **एतैः दिनकरभुवः दूतैः** இந்த யமதூதர்களால் **शश्वत्** அடிக்கடி **उद्बोध्यमानाः** (காலம் குறுகியதென்று) ஞாபகப்படுத்தப்பட்ட நாம் **तदपि** அப்படி இருந்தும் **देहं** சரீரத்தை **त्रातुं** ரக்ஷிக்க **भिषजाम् एव** வைத்தியர்களுக்கே **सान्त्वम्** நல்லவார்த்தையை **वदामः** சொல்லுகிறோம்.

இந்திரியங்கள் ஒடுங்கிவிட்டன; கண்ணை மறைத்து, பற்களை ஆட்டிவைத்து, தலை நரையைத் தந்து, உடம்புக்கு பல ஹீனத்தைக் கொடுத்து, மனதைக் குழப்பி, கைகளை நடுங்கச்செய்து, விருத்தாப்பியம் மேலிட்டபோது, தினம் வந்து யமதூதர்கள் எச்சரிக்கை கொடுத்துக்கொண்டிருக்கும் காலத்திலும், சரீரத்தை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்ற கொள்கையினால் வைத்தியர்களை யுபசரித்து நல்ல வார்த்தை சொல்லுகிறோமேயொழிய, ஈச்வரனை நினைப்பதே யில்லை.

**शान्तो वह्निर्जठरपिठरे संस्थिता कामवार्ता**
**धावं धावं दिशि दिशि शनैरिन्द्रियाश्वा निपेतुः ।**
**एवं दैवादुपरममगादेष मे वैरिवर्ग-**
**श्चेतस्त्वेकं न वशमयते किं करोमि क्व यामि ॥ १२ ॥**

ஶாந்தோ வஹ்னிர்ஜடரபிடரே ஸம்ஸ்திதா காமவார்(த்)தா
தாவம் தாவம் திஶி திஶி ஶனைரிந்த்ரியாஶ்வா நிபேது: |
ஏவம் தைவாதுபரமமகாதேஷ மே வைரிவர்கஶ்-
சேதஸ்த்வேகம் ந வஶமயதே கிம் கரோமி க்வ யாமி ॥ (12)

**जठरपिठरे** வயிற்றில் **वह्निः** (ஜாடர) அக்னி, **शान्तः** அணைந்துவிட்டது; **कामवार्ता** ஸ்திரீ சபலம் என்ற பேச்சே **संस्थिता** அற்றுப்போய்விட்டது; **दिशि दिशि** பல திசைகளில் **धावं धावं** ஓடியோடி **शनैः** வரவர **इन्द्रियाश्वाः** புலன்களாகிற குதிரைகள் **निपेतुः** விழுந்துவிட்டன. **एवम्** இவ்விதமாக **दैवात्** தெய்வச் செயலாக **मे** எனது **एषः वैरिवर्गः** இந்த விரோதிக் கூட்டம் **उपरमम्** ஒழிவை **अगात्** அடைந்தது. **चेतः एकं तु** மனம் ஒன்றுமட்டும் **न वशम् अयते** கட்டுப்படவில்லை. **किं करोमि** என்ன செய்வேன்? **क्व यामि** எங்கு செல்வேன்?

மூப்பில் இந்திரியங்கள் ஒருவாறு திறம் குன்றித் தாமாகவே சோர்ந்துவிழுந்துவிட்டன. ஜீரணசக்தி போய்விட்டது. காமபோகங்களை யனுபவிப்பதில் ஆசையும் ஒழிந்துவிட்டது. இவ்விதம் விரக்திக்கு இடையூறுகளாயிருந்த புலன்கள் அடங்கிவிட்டன என்றாலும், சித்தம் ஒன்றுமட்டும் கட்டுப்படாமல் பலவாறு கெட்டலைந்து திண்டாடுகிறது. இதற்கு என்ன பரிஹாரத்தைத் தேடுவேன்?

नानोपायैर्दिशि दिशि धनान्यर्जयित्वा व्ययित्वा
सम्यक् संपादितमिदमहो स्थौल्यमेकं शरीरे ।
श्रुत्वा श्रुत्वा बहुजनमुखादायुषैतावताऽपि
प्राप्तं दर्शावधितिमिरवद्गाढमज्ञानमेकम् ॥ १३ ॥

நாநோபாயைர் திஶி திஶி தநாந்யர்ஜயித்வா வ்யயித்வா
ஸம்யக் ஸம்பாதிதமிதமஹோ ஸ்தௌல்யமேகம் ஶரீரே |
ஶ்ருத்வா ஶ்ருத்வா பஹுஜநமுகாதாயுஷைதாவதா'பி
ப்ராப்தம் தர்ஶாவதி திமிரவத் காடமஜ்ஞாநமேகம் ‖ (13)

**नानोपायैः** பலவித உபாயங்களால் **दिशि दिशि** பல திக்குகளிலும் **धनानि** தனங்களை **अर्जयित्वा** ஸம்பாதித்து **व्ययित्वा** செலவும் செய்துவிட்டு **शरीरे** சரீரத்தில் **इदम्** இந்த **स्थौल्यम् एकम्** பருமன் ஒன்றுமட்டும் **सम्यक्** நன்றாக **संपादितम्** அடை

யப்பட்டது. **अहो** கஷ்டம்; [**इह** 'இங்கே' என்றும் பாடமுண்டு] **एतावता आयुषा अपि** இவ்வளவு வயதில் **बहुजनमुखात्** பலர் முகமாக **श्रुत्वा श्रुत्वा** அடிக்கடி (தேகம் நிலையற்றது, தர்மமே பெரிது என்று) கேட்டு, **दर्शावधितिमिरवत्** அமாவாசையை முடிவாகவுடைய இருள் போன்ற **गाढम्** அடர்ந்த **अज्ञानम् एकं** அறிவீனம் ஒன்றுமட்டும் **प्राप्तम्** அடையப்பட்டது.

பல முறைகளில் ஈடுபட்டுப் பணங்களைச் சம்பாதித்து பல துறைகளில் செலவும் செய்து ஆகிவிட்டது. முடிவில் நம்மிடம் தங்கிய தென்னவெனில், இப்பெருந் தொந்தி ஒன்றே. மேலும். பல பேர்களிடம் பல சாஸ்திர தத்துவங்களையும் தெரிந்துகொண்டோம். ஆனல், அதனல் ஒரு பலனையும் அடையவில்லை. அஞ்ஞானம் திரள் திரளாகக் குவிந்து நம்மை மூடிக்கொண்டிருப்பதுதான் மிச்சம்.

**क्वेक्षन्ते मां क्वचन शयितं किंकरा दण्डपाणे-**
**रीक्षन्तां वा तदपि मयि किं कुर्युरुद्दामवृत्ते ।**
**कुर्युः किंचित्प्रसभमपि वा घातयिष्यामि राज्ञे-**
**त्यन्तर्धैर्यं परमिह वहन्नन्तकं न स्मरामि ॥ १४ ॥**

க்வேக்ஷந்தே மாம் க்வசன ஶயிதம் கிங்கரா தண்டபாணே-
ரீக்ஷந்தாம் வா தத³பி மயி கிம் குர்யுருத்³தா³மவ்ருத்தே |
குர்யுஃ கிஞ்சித்ப்ரஸப⁴மபி வா கா⁴தயிஷ்யாமி ராஜ்ஞே-
த்யந்தர்தை⁴ர்யம் பரமிஹ வஹன்னந்தகம் ந ஸ்மராமி || (14)

**क्वचन शयितं मां** எங்கேயோ (ஒரு மூலையில்) படுத்திருக்கும் என்னை **दण्डपाणेः** யமனுடைய **किंकराः** தூதர்கள் **क्व ईक्षन्ते** எங்கு பார்க்கப்போகிறார்கள்? **ईक्षन्तां वा** பார்க்கத்தான் பார்க்கட்டுமே, **तदपि** அப்படியும் **उद्दामवृत्ते मयि** யாருக்கும் அடங்காத செய்கையுள்ள என் விஷயத்தில் **किं कुर्युः** என்ன செய்வார்கள்? **किंचित् कुर्युः अपि वा** ஏதாவது அவர்கள்

செய்வதாக வைத்துக் கொண்டாலும், **राज्ञा** அரசனைக் கொண்டு **प्रसभम्** உடனே **घातयिष्यामि** கொன்றுவிடச் செய்கிறேன் **इति** என்று **इह** இந்த விஷயத்தில் **परम्** அதிகமான **अन्तर्धैर्यम्** மனோதைரியத்தை **वहन्** அடைந்து **अन्तकम्** யமனை **न स्मरामि** (நான்) கருதவில்லை.

மிருத்யுபயமே இல்லாமல் நான் யதேச்சையாக ஸஞ்சரிக்கிறேன். "நான் யமதூதர்கள் கண்ணில் படாமல் இருக்கலாமல்லவா? அவர்கள் என்னைக் கண்டுகொண்டாலும், நான்தான் யாருக்கும் உட்படாத ஸாஹஸக்காரனுச்சுதே, என்னை அவர்கள் என்ன செய்யமுடியும்? அப்படி அவர்கள் என்னை ஏதாவது ஹிம்ஸித்தால், நாம் அரசனிடம் முறையிட்டுக்கொண்டு அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்கச் செய்யலாம்" என்று இப்படியெல்லாம் தைரியம் செய்து கொள்ளுகிறேன்.

குறிப்பு :—இவ்விதமெல்லாம் மூடர்கள் நினைத்துக்கொண்டு அசட்டுத் தைரியத்துடன் கடவுளை நினையாமல் கெட்டுப்போகிறார்கள் என்பது கருத்து.

**वेदा वा स्युर्वितथवचना विस्मरेदीश्वरो वा**
**धर्माधर्मस्थितिविरचनामन्तको वा मृषा स्यात् ।**
**नित्यो वा स्यामहमिति बहूनुल्लिखन्तः समाधीन्**
**मेदोवृद्ध्या मुदितमनसः सर्वतो निर्वृताः स्मः ॥ १५॥**

வேதா வா ஸ்யுர்விததவசனா விஸ்மரேதீஶ்வரோ வா
யர்மாயர்மஸ்யிதிவிரசனாமந்தகோ வா ம்ருஷா ஸ்யாத் |
நித்யோ வா ஸ்யாமஹமிதி பஹூநுல்லிகந்த: ஸமாதீன்
மேதோவ்ருத்த்யா முதிதமனஸ: ஸர்வதோ நிர்வ்ருதா: ஸ்ம:||(15)

**वेदाः** வேதங்கள் **वितथवचनाः** பொய்யுரைப்பவைகளாக **वा स्युः** இருக்கலாமல்லவா? **ईश्वरः** ஈச்வரன் **धर्माधर्मस्थितिविरचनाम्** தர்மம் அதர்மம் என்று செய்த முறைமையை **विस्मरेत्**

**वा** மறந்து விடலாமல்லவா? **अन्तकः** யமன் (என்பவனே) **मृषा स्यात् वा** பொய்யாயிருக்கலாமல்லவா? **अहं नित्यो वा स्याम्** நான் என்றும் அழிவில்லாதவனுக இருக்கலாமல்லவா? **इति** என்று **बहून्** பல **समाधीन्** ஸமாதானங்களை **उल्लिखन्तः** கல்பனை செய்துகொண்டு **मेदो- वृद्ध्या** தேகம் கொழுப்பேறுவதால் **मुदितमनसः** மனமகிழ்ச்சி யடைந்து **सर्वतः** எதைப்பற்றியும் **निर्वृताः स्मः** சிந்தையற்றவர்களாய் இருக்கிறேம்.

உடம்பில் திமிர் ஏறி, சித்தம் வெறிகொண்டு, 'ஒன்றும் நமக்கு லக்ஷ்யம் இல்லை' என்று சுகித்திருக்கும் நாம், "வேதங்கள் பொய்யாயிருக்கலாம், ஈச்வரன் தான் செய்த ஏற்பாடுகளையே மறந்துவிடலாம், யமன் என்பது விளையாட்டுப் பேச்சாக இருக்கலாம், நாம் இந்த சரீரத்துடன் சிரஞ்சீவியாகவே இருக்கலாம்" என்று இப்படியெல்லாம் மனப்பால் குடித்துக்கொண்டு அதர்மத்தில் மூழ்கியிருக்கிறேம்.

**यामे यामे गलति वपुषः स्रंसते सन्धिबन्धः**
**श्वासे श्वासेऽपि च विचलति क्षीयते दीर्घमायुः ।**
**भुक्ते भुक्तेऽपि च सुखलवे लुप्यते पुण्यराशिः**
**कृत्ये कृत्ये निरवधि पुनर्वर्धते पातकं नः ॥ १६ ॥**

யாமே யாமே கலதி வபுஷஃ ஸ்ரம்ஸதே ஸந்திபந்தஃ
ஶ்வாஸே ஶ்வாஸே'பி ச விசலதி க்ஷீயதே தீர்கமாயுஃ |
புக்தே புக்தே'பி ச ஸுகலவே லுப்யதே புண்யராஶிஃ
க்ருத்யே க்ருத்யே நிரவதி புனர்வர்ததே பாதகம் நஃ || (16)

**यामे यामे गलति** ஒவ்வொரு ஜாமம் கழியும்போதும் **वपुषः** சரீரத்தின் **सन्धिबन्धः** மூட்டுகளின் கட்டு **स्रंसते** தளர்கின்றது; **अपि च** இன்னமும் **श्वासे श्वासे विचलति** ஒவ்வொரு மூச்சும் வெளிவரும்போது **दीर्घम् आयुः** நீண்ட ஆயுளும் **क्षीयते** குறைந்து வருகிறது. **अपि च** மேலும் **भुक्ते भुक्ते सुखलवे** சிறிதளவு சுகத்தை அனுபவிக்க அனுபவிக்க

**पुण्यराशिः** புண்ணியக் குவியல் **लुप्यते** குன்றுகிறது; **नः** நம்முடைய **कृत्ये कृत्ये** ஒவ்வொரு காரியத்திலும் **पातकम् पुनः** பாபம் மட்டும் **निरवधि** எல்லையில்லாமல் **वर्धते** வளர்கிறது.

நாழிகைக்கு நாழிகை மூப்பு முதிருகிறது. அதனால் அவயவங்களின் தளர்ச்சி ஏற்படுகிறது. மூச்சுக்கு மூச்சு நீண்டதான ஆயுளும் குறுகிக்கொண்டே வருகிறது. அனுபவிக்க அனுபவிக்க பூர்வ புண்ணியத்தின் பெருங்குவியலும் கரைந்து விடுகிறது. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பாபம் மட்டும் கணக்கில்லாமல் கூடிவருகிறது.

गन्तव्योऽध्वा सकलदुरवस्थानसंपातभूमि-
र्गत्वा द्रश्यस्त्रिभुवनजनायुष्कलान्तः कृतान्तः ।
द्दष्ट्वा लभ्या निरयजनिता यातना नैकभेदा
विस्मृत्येदं निखिलमपि तु व्यर्थमायुर्नयामः ॥ १७ ॥

கந்தவ்யோ'த்வா ஸகலதுரவஸ்தானஸம்பாதபூமிர்-
கத்வா த்ருஶ்யஸ்த்ரிபுவனஜனாயுஷ்கலாந்தஃ க்ருதாந்தஃ |
த்ருஷ்ட்வா லப்யா நிரயஜனிதா யாதனா நைகபேதா
விஸ்ம்ருத்யேதம் நிகிலமபி து வ்யர்த்தமாயுர்நயாமஃ ‖ (17)

**गन्तव्योऽध्वा** நாம் போகவேண்டிய வழி **सकलदुरवस्थानसंपातभूमिः** எல்லாவித அஸௌகரியங்களும் ஒருங்கே சேரும் இடம்; **गत्वा** போனபின் **त्रिभुवनजनायुष्कलान्तः** மூவுலகிலுமுள்ள ஜனங்களின் ஆயுஸ்ஸை முடிவு செய்யும் **कृतान्तः** யமன் **द्रश्यः** காணவேண்டியவன் ; **द्दष्ट्वा** பார்த்தபின் **नैकभेदाः** பற்பல வகையான **निरयजनिताः** நரகத்தில் உண்டாகும் **यातनाः** வேதனைகள் **लभ्याः** அனுபவிக்க வேண்டியவை; **अपि तु** ஆனால் **निखिलम् इदं** இதையெல்லாம் **विस्मृत्य** மறந்து **आयुः** வாழ்நாளை **व्यर्थं** வீணாக **नयामः** கழிக்கின்றோம்.

இறந்தபிறகு கொரேமான தொந்தரவுகள் மிகுந்த பாழும் வழியே செல்லவேண்டும் என்றும், இறுதியில் யம

தர்மராஜன் ஸபையில் போய் நிற்கவேண்டு மென்றும், பின்பு அவரால் கட்டளையிடப்படும் பற்பல விதமான வேதனைகளைத் தரும் நரகவாஸத்தை யனுபவிக்க வேண்டுமென்றும் இதையெல்லாம் மறந்து ஆயுளை வீணாகக் கழித்து வருகின்றோம்.

**काले काले न किमुपनतं भुञ्जते भोज्यजातं**
**गृह्णन्त्यम्भो न किमथ न किं संविशन्ति क्षपासु ।**
**पुष्णन्ति स्वान्न किमु पृथुकान् स्त्रीषु किं नो रमन्ते**
**कृत्याकृत्यव्यपगतधियां कस्तिरश्चां च भेदः ॥ १८॥**

காலே காலே ந கிமுபநதம் ஹுஞ்ஜதே ஹோஜ்யஜாதம்
ஙுஹ்ணந்த்யம்ஹோ ந கிமது ந கிம் ஸம்விஶந்தி க்ஷபாஸு |
புஷ்ணந்தி ஸ்வான் ந கிமு ப்ருதுகான் ஸ்த்ரீஷு கிம் நோ ரமந்தே
க்ருத்யாக்ருத்யவ்யபகததியாம் கஸ்திரஶ்சாம் ச ஹேதஃ ‖ (18)

**काले काले** (மிருகங்கள்) அவ்வப்போது **उपनतम्** கிடைத்த **भोज्यजातम्** உணவுப் பொருள்களை **किं न भुञ्जते** உட்கொள்வதில்லையா? **अम्भः** ஜலத்தை **किं न गृह्णन्ति** பருகவில்லையா? **अथ** மேலும் **क्षपासु** இரவுகளில் **किं न संविशन्ति** படுத்துறங்குவதில்லையா? **स्वान्** தங்களுடைய **पृथुकान्** குட்டிகளை **किमु न पुष्णन्ति** போஷிப்பதில்லையா? **स्त्रीषु** ஸ்திரீகளிடம் **किं नो रमन्ते** கிரீடிக்கவில்லையா? **कृत्याकृत्यव्यपगतधियां** செய்யத் தகுந்தது செய்யத் தகாதது என்ற விவரம் அறியாதவர்களுக்கும் **तिरश्चां च** மிருகங்களுக்கும் **कः भेदः** என்ன பேதம்?

ஆஹாரம், தாகசாந்தி, நித்திரை, குழந்தைகளை வளர்த்தல், காமப் பிரவிருத்தி ஆகிய இந்த அம்சங்களில் மனுஷ்யனுக்கும் மிருகங்களுக்கும் என்ன பேதம் இருக்கிறது? இன்னது செய்யத்-தக்கது இன்னது செய்யத் தகாதது என்ற பகுத்தறிவு இருந்தால் மட்டும் மனுஷ்யனேயன்றி,

மேற்கூறிய ஆஹாராதிப் பிரவிருத்திகளில் மட்டும் ஈடுபட்டு விவேகமில்லாமல் இருப்பவன் மிருகமே.

कृच्छ्राल्लब्धं धनमपि शतांशाधिकप्राप्तिलोभात्
पत्रे किञ्चिल्लिखितमुपलभ्यैव सर्वं त्यजामः ।
शास्त्रैः सिद्धे बहुशतगुणाधिक्यलाभे परत्र
व्यर्थाशङ्काकलुषमनसो नोत्सृजामोऽर्थलेशम् ॥ १९ ॥

க்ருச்ஹ்ரால்லப்தம் தனமபி ஶதாம்ஶாதிகப்ராப்திலோபாத்-
பத்ரே கிஞ்சில்லிகிதமுபலப்யைவ ஸர்வம் த்யஜாமஃ |
ஶாஸ்த்ரைஃ ஸித்தே பஹுஶதகுணாதிக்யலாபே பரத்ர
வ்யர்தாஶங்காகலுஷமனஸோ நோத்ஸ்ருஜாமோ'ர்தலேஶம் ||

**कृच्छ्रात् लब्धं** பிரயாசைப்பட்டு சம்பாதிக்கப்பட்ட **धनं सर्वम् अपि** பணம் முழுவதையும் **शतांशाधिकप्राप्तिलोभात्** நூற்றுக்கு ஒன்றைவிட அதிக வட்டி வாங்குவதில் ஆசையினால் **पत्रे लिखितं** காகிதத்தில் எழுதப்பட்ட **किंचित्** ஏதோ ஒன்றை **उपलभ्य एव** வாங்கிக்கொண்டே **त्यजामः** கொடுத்து விடுகிறோம். **परत्र** பரலோகத்தில் **बहुशतगुणाधिक्यलाभे** அநேக நூறு மடங்கு அதிகமான லாபமானது **शास्त्रैः सिद्धे** சாஸ்திரங்களினால் உறுதி செய்யப்பட்டிருக்கையில் **व्यर्थाशङ्काकलुषमनसः** வீண் அவநம்பிக்கையால் கலங்கிய மனத்தினர்களாய் **अर्थलेशं** சிறிதளவும் பணத்தையும் **नोत्सृजामः** (நாம்) கொடுப்பதில்லை.

ஸ்வல்ப வட்டித்தொகைக்கு ஆசைப்பட்டு, கடன் பத்திரத்தை நம்பி, தான் சிரமப்பட்டு வெகு காலமாய்ச் சேர்த்துவைத்த பணத்தை ஒருவன் பிறனுக்குக் கொடுத்து விடவில்லையா? முதலைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பலன் பரலோகத்தில் கொடுக்கப்படும் என்று சாஸ்திரங்கள் முறையிடுவதை நம்பி ஒருவனும் ஒரு காசுகூட தர்ம வழியில் செலவிட ஸம்மதிக்கவில்லை. கடன் பத்திரத்தை நம்பு

கிறவன் தர்ம சாஸ்திரங்களின் உறுதிமொழிகளைப் பற்றித் தர்க்கங்கள் செய்து நம்பிக்கை யுண்டாகாத மனமுடையவனாகிறான்.

जीर्णे रुग्णे विकलकरणे शत्रुभिर्वा गृहीते
स्वस्मिन् कोऽर्थो भवति सुखदः कश्च कामप्रसङ्गः ।
मा भूदेतत् सकलमथवा स्वायुषः किं प्रमाणं
निश्चित्यैवं दुरितनिचयश्चीयते निर्विशङ्कैः ॥ २० ॥

ஜீர்ணே ருக்ணே விகலகரணே ஶத்ருபிர்வா க்ருஹீதே
ஸ்வஸ்மின் கோ'ர்த்தோ பவதி ஸுகத: கஶ்ச காமப்ரஸங்க: |
மா பூதேதத் ஸகலமதவா ஸ்வாயுஷ: கிம் ப்ரமாணம்
நிஶ்சித்யைவம் துரிதநிசயஶ்சீயதே நிர்விஶங்கை: ॥ (20)

**स्वस्मिन्** தான் **जीर्णे** கிழத்தன மடைந்தாலும் **रुग्णे** வியாதியினால் பீடிக்கப்பட்டாலும் **विकलकरणे** இந்திரியங்களின் பலஹீனத்தை யடைந்தாலும் **शत्रुभिः गृहीते वा** அல்லது சத்ருக்களால் கைதி செய்யப்பட்ட போதிலும் **कोऽर्थः** எந்தப் பணம் **सुखदः** சுகத்தைத் தருவதாக **भवति** ஆகிறது? **कामप्रसंगश्च कः** போக ஸுகத்திற்கு இடமேது? **अथवा** அல்லது, **एतत् सकलं** இதெல்லாமே **मा भूत्** போகட்டும்; **स्वायुषः** தன் ஆயுஸுக்கு **किं प्रमाणं** என்ன நம்பிக்கை (உத்திரவாதம்)? **एवं** இப்படி **निश्चित्य** நிச்சயித்து **निर्विशङ्कैः** சிறிதும் அஞ்சாத நம்மால் **दुरितनिचयः** பாபக்குவியல் **चीयते** சேர்க்கப்படுகிறது.

தற்கால வாழ்க்கையே நிஜமென்றிருப்பவன் "கிழத்தனமோ, வியாதியோ, அவயவங்களின் தளர்ச்சியோ, சத்ருக்களிடம் அடிமைத்தனமோ எதற்குள் வரவில்லையோ அதற்குள் பணத்தினாலும் ஸ்திரீகளினாலும் அடையக்கூடிய சுகங்களை அனுபவித்துத் தீர்த்துவிடவேண்டும்" என்ற தீர்மானத்துடன் எந்தப் பாபச்செயலுக்கும் துணிந்துவிடுகிறான்.

தேகம் நன்றாயிருக்கும்போதே கர்மத்தைச்செய்து அழிவற்ற இன்பத்தைப் பெறவேண்டும் என்று நினைப்பதில்லை.

**आयान्त्यग्रे ननु तनुभवा उत्तमर्णा इवेमे**
**शय्यालग्नाः फणभृत इवाभान्ति दारा इदानीम् ।**
**कारागेहप्रतिममधुना मन्दिरं दृश्यते मे**
**तत्र स्थातुं प्रसजति मनो न क्षणं न क्षणार्धम् ॥ २१ ॥**

ஆயாந்த்யக்ரே நனு தனுஹவா உத்தமர்ணா இவேமே
ஶய்யாலக்நாஃ ஹணஹ்ருத இவாஹாந்தி தாரா இதானீம் ।
காராகேஹப்ரதிமமதுனா மந்திரம் த்ருஶ்யதே மே
தத்ர ஸ்தாதும் ப்ரஸஜதி மனோ ந க்ஷணம் ந க்ஷணார்தம் ॥ (21)

**इमे तनुभवाः** இதோ இந்தப் புத்திரர்கள் **उत्तमर्णा इव ननु** கடன் கொடுத்தவர்களைப் போலல்லவா **अग्रे आयान्ति** எதிரில் வருகிறார்கள்; **इदानीं** இப்பொழுது **दाराः** மனைவி **शय्यालग्नाः** படுக்கையில் உறையும் **फणभृतः इव** ஸர்ப்பம்போல் **आभान्ति** தோன்றுகிறாள்; **अधुना** இப்பொழுது **मे** எனது **मन्दिरं** வீடு **कारागेहप्रतिमं** சிறையைப்போல் **दृश्यते** காணப் படுகிறது; **तत्र** அவ்விடத்தில் **क्षणं** ஒரு கணமும் **स्थातुं** தாமதிக்க **मनः** மனது **न प्रसजति** விரும்பவில்லை; **क्षणार्धं स्थातुं** அரை க்ஷணங்கூடத் தாமதிக்க (மனம் விரும்பவில்லை).

புத்திரகளத்திராதிகளைப் போஷிப்பதற்காகப் பாடு பட்டுப் பணத்தைத் தேடிய கிருஹஸ்தனுக்கு வயது மேலிட்டபின்பு, ஸம்பாதிக்கும் சக்தி குறைந்து வீட்டில் அதிகாரமும் விலகிப் போகுந் தருணம், தன் பிள்ளைகளை யெதிரில் கண்டால்கொடுத்த கடனைக் கேட்க வந்தவர்களைப் போல் தோன்றுகிறது; பக்கத்தில் உறையும் பெண்டாட்டி யைப் பார்த்தாலோ படமெடுத்தாடும் பாம்பைப் பார்ப்பது போல் இருக்கிறது; இனி வீட்டில் என்ன ஸௌக்யம்? இந்தச் சிறையிலிருந்து வெளியில்போய் விடவேண்டும் என்று தீர்மானம் செய்கிறான்.

जातं जातं गतमपि गतं बाल्यतो लौल्यतो वा
नेतः स्थेयं क्षणमपि गृहे मुञ्चतः को मुहूर्तः ।
इत्यत्यन्तव्यवसितधियो निःसरन्तोऽपि गेहा-
दावर्तन्ते झटिति रुदतां सान्त्वहेतोः शिशूनाम् ॥ २२ ॥

ஜாதம் ஜாதம் ஞதமபி ஞதம் ஞால்யதோ லௌல்யதோ வா
நேதஃ ஸ்யேயம் க்ஷணமபி ஞுஹே முஞ்சதஃ கோ முஹூர்(த்)தஃ |
இத்யத்யந்தவ்யவஸிதயியோ நிஸ்ஸரந்தோ'பி ஞேஹா-
தாவர்(த்)தந்தே ஜடிதி ருஉதாம் ஸாந்த்வஹேதோஃ ஶிஶூநாம் ||

**बाल्यतः** சிறுபிள்ளைத் தனத்தினுலும் **लौल्यतः** புத்தி சபலத்தினுலும் **जातं जातं** நடந்தது நடந்துவிட்டது; **गतमपि गतं** போனது போய்விட்டது; **इतः** இனிமேல் **क्षणमपि** ஒரு நிமிஷங்கூட **गृहे** வீட்டில் **न स्थेयं** தங்கக்கூடாது. **मुञ्चतः** விட்டுப் போகிறவனுக்கு **को मुहूर्तः** நல்லவேளை எதற்காகப் பார்க்கவேண்டும்? **इति** என்று **अत्यन्तव्यवसित-धियः** திடமான தீர்மானத்தோடு கூடிய மனத்தினர்களாய் **गेहात्** வீட்டிலிருந்து **निस्सरन्तोऽपि** வெளிக் கிளம்புகிறவர்கள் கூட **रुदतां** அழுகின்ற **शिशूनां** குழந்தைகளை **सान्त्वहेतोः** சமாதானம் செய்யும்பொருட்டு **झटिति** உடனே **आवर्तन्ते** திரும்பி விடுகிறார்கள்.

இவ்வித வெறுப்பைக் கொண்டவன் யோசிக்கிறான்:— "போனதெல்லாம் போகட்டும்; சிறு பிராயத்தில் அறியாமையாலும் யௌவன தசையில் புத்தி சபலத்தாலும் எவ்வளவோ தவறுதல்கள் நடந்துவிட்டன. நடந்தது நடந்துவிட்டது. இனி ஒரு நிமிஷமும் வீட்டில் தங்கக்கூடாது. துறப்பவன் நல்ல முஹூர்த்தம் பார்க்கவேண்டியதில்லை. எந்த நிமிஷம் வைராக்யம் ஏற்படுகிறதோ, அந்த நிமிஷமே புறப்பட வேண்டும்" என்று திடமான தீர்மானம் செய்து கொண்டு புறப்படுகிறான். அந்த ஸமயம் வீட்டில் குழந்தை

களின் அழுகைக் குரல் காதிலே பட்டதும் அவர்களை ஸமாதானம் செய்யும் பொருட்டு விரைவாகத் திரும்பி வந்துவிடுகிறான். (இவ்வளவு தான் நம் வைராக்கியத்தின் உறுதி.)

नैव ब्रूमो वयमतिथयोऽभ्यागता बन्धुवर्गा
दीनानाथाः सुहृद इति ये तेषु कार्या दयेति ।
यं त्वं पोष्यं मनसि कुरुषे नित्यमात्मानमेकं
जन्मन्यस्मिन्निव बिभृहि तं सर्वदेत्युल्लपामः ॥ २३ ॥

நைவ ப்ரூமோ வயமதிதயோ'ப்யாகதா பந்துவர்கா
தீனானாதா: ஸுஹ்ருத இதி யே தேஷு கார்யா தயேதி |
யம் த்வம் போஷ்யம் மனஸி குருஷே நித்யமாத்மானமேகம்
ஜன்மன்யஸ்மின்னிவ பிப்ருஹி தம் ஸர்வதேத்யுல்லபாம: ||

**अतिथयः** அதிதிகள் **अभ्यागताः** நாடிவந்தவர்கள் **बन्धुवर्गाः** பந்துஜனங்கள் **दीनानाथाः** ஏழைகள் திக்கற்றவர்கள் **सुहृदः** நண்பர்கள் **इति ये** என்று எவர்கள் உண்டோ **तेषु** அவர்களிடத்தில் **दया कार्या इति** அனுதாபம் காட்டவேண்டுமென்று **नैव ब्रूमः** நாம் கூறவேயில்லை; **यमेकं नित्यं पोष्यं** யாதொருவனை எப்போதும் போஷிக்கவேண்டியதென்று **मनसि त्वं कुरुषे** மனதில் நீ தீர்மானித்திருக்கிறாயோ **तमात्मानं** அத்தகைய தன்னை **अस्मिन् जन्मनि इव** இந்த ஜன்மத்தில் போல **सर्वदा** எந்த ஜன்மத்திலும் **बिभृहि** நீ போஷிப்பாயாக **इति उल्लपामः** என்று (தான்) சொல்லுகிறோம்.

நீ அதிதி பந்து மித்திரர்கள் ஏழை யெளியவர்கள் இவர்களை உபசரித்துத் தான் ஆகவேண்டுமென்று ஒருவரும் சொல்லவில்லை. உன்னை நீ போஷித்துக் கொள்ள வேண்டுமென்று நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்கிறாய் அல்லவா? அந்த உன்னையே நீ இந்த ஜன்மத்தில் மட்டுமன்று, வரப்போகிற ஜன்மங்களிலும் போஷித்துக் கொள் என்று தான் கதறுகிறார்கள் தர்ம சாஸ்திர கர்த்தாக்கள்.

को नु व्यासः क इव स मनुः कोन्वसौ याज्ञवल्क्यो
यैरुद्घुष्टं हितमसकृदस्मासु पित्रेव पुत्रे ।
पश्यामस्तान्निरुपधिकृपासागराँल्लोकबन्धून्
पश्यामोऽस्मान्निरवधितमःक्ष्माधारान्ब्रह्मबन्धून् ॥ २४॥

கோ னு வ்யாஸ: க இவ ஸ மனு: கோன்வஸெள யாஜ்ஞவல்க்யோ
யைருத்³வுஷ்டம் ஹிதமஸக்ருத³ஸ்மாஸு பித்ரேவ புத்ரே |
பஶ்யாமஸ்தான்நிருபதி⁴க்ருபாஸாக³ரான் லோகப³ந்தூ⁴ன்
பஶ்யாமோ'ஸ்மான் நிரவதி⁴தம:க்ஷ்மாதா⁴ரான் ப்³ரஹ்மப³ந்தூ⁴ன் ॥ (24)

**यैः** (எந்த மஹான்களால்) எவர்களால் **असकृत्** பன்முறை **अस्मासु** நம் விஷயத்தில் **पित्रा पुत्रे इव** ஒரு பிதாவினல் புத்ரன் விஷயத்திலே போல **हितम्** நன்மையானது **उद्घुष्टम्** உரத்த குரலில் போதிக்கப்பட்டதோ, **सः व्यासः को नु** அந்த வியாஸர் என்பவர் யார்? **सः मनुः कः इव** அந்த மனு தான் யாரோ? **असौ याज्ञवल्क्यः को नु** இந்த யாக்ஞவல்கியர் யார்? **तान्** அவர்களை **निरुपधिकृपासागरान्** களங்க மற்ற கருணைக் கடல்களாகவும் **लोकबन्धून्** உலகின் உறவினர்களாகவும் **पश्यामः** அறிகிறோம்; **अस्मान्** நம்மையோவென்றால் **निरवधितमःक्ष्माधरान्** எல்லையற்ற இருள் மலைகளாகவும் **ब्रह्मबन्धून्** பிராம்மண ஜன்மத்தில் இழிந்தவர்களாகவும் **पश्यामः** அறிகிறோம்.

வியாஸர், மனு, யாஜ்ஞவல்க்யர் என்ற பெரியோர்கள் யார், நாம் யார்? அவர்கள் ஞானிகள் ஆதலால், கருணை ததும்பும் அந்தரங்கத்துடன், பிதா புத்திரனுக்கு உபதேசிப்பதுபோல் நமக்கு எது இகத்திலும் பரத்திலும் ஹிதமோ அதைப் பல வழிகளில் விளக்கி யிருக்கிறார்கள். ஆனல் நாம் என்ன கூறியும் என்றும் நிகரற்ற அவிவேகிகளாகவும், ஆசாரம் இழந்தவர்களாகவும் இருந்து கொண்டிருப்பதுதான் பரிதாபம்.

**यत्तामिस्रे नरककुहरे यद्बहिश्चक्रवाला-**
**द्यत्पाताले यदपि धरणौ वार्षिकीषु क्षपासु ।**
**रूढं गाढं तम इति समस्तं च तच्चिन्त्यमानं**
**नास्माकान्तःकरणतमसो दासभावेऽपि योग्यम् ॥ २५ ॥**

*யத்தாமிஸ்ரே நரககுஹரே யத்₃ப₃ஹிஶ்சக்ரவாளாத்₃-*
*யத்பாதாலே யத₃பி த₄ரணௌ வார்ஷிகீஷு க்ஷபாஸு |*
*ரூட₄ம் கா₃ட₄ம் தம இதி ஸமஸ்தம் ச தச்சிந்த்யமானம்*
*நாஸ்மாகாந்தஃகரணதமஸோ தா₃ஸபா₄வே'பி யோக்₃யம் ॥ (25)*

**यत्** எது **तामिस्रे** தாமிஸ்ரம் என்ற **नरककुहरे** நரகக்குழியிலும் **यत्** எது **चक्रवालात् बहिः** சக்ரவாள மலைத்தொடருக்கு அப்பாலும் **यत् पाताले** எது பாதாளத்திலும் **वार्षिकीषु क्षपासु** மழைக்கால இரவுகளில் **यत् धरणौ** எது பூமியிலும் **गाढं तमः इति** காரிருள் என்று **रूढं** பிரஸித்தமோ **चिन्त्यमाने** யோசித்துப் பார்த்தால் **समस्तं च तत्** அது அவ்வளவும் **आस्माकान्तः-करणतमसः** நம் சித்தத்திலிருக்கும் இருளுக்கு **दासभावेऽपि** அடிமைத்தனம் அடைவதற்குக் கூட **न योग्यम्** யோக்யதையுள்ளதன்று.

நம் ஹ்ருதயத்தில் குடிகொண்டிருக்கும் காரிருளுக்கு உவமையே சொல்லமுடியாது; இருள் மயமான நரகக் குழியில் கிடப்பதும், லோகாலோக பர்வதத்திற்குப் புறம்பே சூழ்ந்து நிற்பதும், பாதாள லோகத்திலுள்ளதும், கார் காலத்து நள்ளிரவுகளில் திரண்டு வருவதுமான இருள்கள் நம் அஞ்ஞான அந்தகாரத்திற்குக் கூலிவேலை செய்யக்கூட அர்ஹதை யில்லாதவை.

(குறிப்பு) லோகாலோக பர்வதம்—சக்ரவாள பர்வதமென்பது இப் பூமண்டலத்தைச் சுற்றி நிற்கும் சுவர் போன்றது. அதற்கு வெளியில் சூரிய கிரணங்கள் எட்டுவதில்லை.

**सर्वानर्थप्रथमकरणे सर्वभावैर्जिहास्ये**
**देहे मोहो यदि परिणतः पोषणीयो मयेति।**
**आस्तामेवं वपुरिदमिवागामि चास्माकमेवे-**
**त्येषाऽप्यास्तां मतिरिति परं धर्मशास्त्रेषु घोषः ॥ २६ ॥**

ஸர்வானர்யுப்ரயுமகரணே ஸர்வஹாவைர்ஜிஹாஸ்யே
ஷேஹே மோஹோ யதி பரிணதஃ போஷணீயோ மயேதி |
ஆஸ்தாமேவம் வபுரிஉமிவா ஙாமி சாஸ்மாகமேவே-
த்யேஷா'ப்யாஸ்தாம் மதிரிதி பரம் யுர்மஶாஸ்த்ரேஷு வோஷஃ

**सर्वानर्थप्रथमकरणे** எல்லாவித அனர்த்தங்களுக்கும் முதல் ஸாதனமானதும் **सर्वभावैः जिहास्ये** எப்படி யோஜித்துப் பார்த்தாலும் தள்ளத் தகுந்ததுமான **देहे** சரீரத்தில் **मया पोषणीयः** (இது) என்னால் போஷிக்கப்படவேண்டியது **इति मोहः** என்ற அறிவீனம் **यदि परिणतः** முற்றியிருந்தால் **एवं** இம்மாதிரி **आस्ताम्** இருக்கட்டும்; **इदं वपुरिव** இந்த சரீரம் போலவே **आगामि च** வரப்போகிற சரீரமும் **आस्माकमेव** நம்முடையதுதான் **इति** என்ற **एषाऽपि मतिः** இந்த எண்ணமும் **आस्तां** (நமக்கு) இருக்கட்டும் **इति परं** என்பதுதான் **धर्मशा-स्त्रेषु** தரும சாஸ்திரங்களில் **घोषः** பறையறிவிக்கப்படுகிறது.

வெறுக்கத் தக்கதான இந்த சரீரம் அவசியம் போஷிக்கத் தகுந்ததென்ற அறியாமை உனக்கு இருக்குமானால், 'இந்த சரீரம் நம்முடையது ஆனதுபோல, வரப்போகிற சரீரங்களும் நம்முடையது தான்; அவைகளையும் போஷிப்பது அவசியம். அவைகள் நலம்பெற நாம் இப்போதே தர்மங்களைச் செய்யவேண்டும் என்ற ஞாபகம் இருக்கட்டும்'' என்றுதான் தரும சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

**कामी कामव्रणपरिगतः कामिनीरेव हित्वा**
**भुङ्क्ते पश्चादपगतभयं कामिनीनां सहस्रम्।**
**इत्थंकारं विषयसुखभोगैकतानैर्नरैर-**
**प्यस्मिन्देहे कतिपयदिनान्येष भोगो विवर्ज्यः ॥ २७ ॥**

காமீ காமவ்ரணபரிகதஃ காமினீரேவ ஹித்வா
ஹ்ங்க்தே பஶ்சாதபகதபயம் காமினீனாம் ஸஹஸ்ரம் |
இத்தம்காரம் விஷயஸுகபோகைகதானைர் நரைர-
ப்யஸ்மின் தேஹே கதிபயதினான்யேஷ போகோ விவர்ஜ்யஃ ||

**कामव्रणपरिगतः** ஸ்திரீமூலமான ரோகங்களால் பீடிக்கப்பட்ட **कामी** துன்மார்க்கன் **कामिनीः एव** ஸ்திரீகளையே **हित्वा** (சிலகாலம்) விட்டுவிட்டு **पश्चात्** பின்பு **कामिनीनां सहस्रं** வேண்டியமட்டும் ஸ்திரீகளை **अपगतभयं** பயம் நீங்கியவனக **भुङ्क्ते** அனுபவிக்கிறான் ; **इत्थंकारं** இவ்விதம் **विषयसुख-भोगैकतानैरपि नरैः** சிற்றின்பமே முக்கியமென்றுகொண்ட மனிதர்களாலேகூட **अस्मिन् देहे** இந்த சரீரத்தில் **कतिपयदिनानि** சில நாட்கள்வரையில் **एष भोगः** இந்த இன்பத்தை யனுபவிப்பது **विवर्ज्यः** ஒதுக்கத் தக்கதாகிறது.

காமரோகத்தால் வருந்துகிற ஒரு காமி சிகித்ஸையின் பொருட்டு சிலகாலம் ஸ்த்ரீகளை விலக்கியிருந்து பிறகு பயமின்றி அநேகம் ஸ்த்ரீகளை அனுபவிப்பதுபோல, இவ்வுலகில் சரீர ஸுகத்தைச் சிறிதுகாலம் விட்டு சாஸ்திரங்களிற் கூறிய நற்காரியங்களைச் செய்துவந்தால் பின்பு ஸ்வர்க்கம் முதலிய வேறு உலகத்தில் பயமின்றி அநேக ஸுகங்களை யடையலாம் என்பது கருத்து.

न्याय्यादर्थादपि किमधिकं लभ्यमुन्मार्गवृत्त्या
वैधादन्नादपि किमधिकं पर्युदस्तेषु भोज्यम् ।
भार्याभोगादपि भवति कः पण्यकान्तासु भोगः
प्रायो नेति श्रुतिविषयता विश्वमाधुर्यहेतुः ॥ २८ ॥

ந்யாய்யாதர்தாதபி கிமதிகம் லப்யமுன்மார்கவ்ருத்யா
வைதாதன்னாதபி கிமதிகம் பர்யுதஸ்தேஷு போஜ்யம் |
பார்யாபோகாதபி பவதி கஃ பண்யகாந்தாஸு போகஃ
ப்ராயோ நேதி ஶ்ருதிவிஷயதா விஶ்வமாதுர்யஹேதுஃ || (28)

**न्याय्यादर्थादपि** நியாயமான வழியில் சம்பாதிக்கப்படும் பணத்தைக் காட்டிலும் **उन्मार्गवृत्त्या** அக்ரம வழியில் **अधिकं** அதிகம் **किं लभ्यं** அடையக்கூடியதா என்ன? **वैधादन्नादपि** பரிசுத்தமான அன்னத்தைக் காட்டிலும் **पर्युदस्तेषु** தள்ளுபடியான அன்னங்களில் **अधिकं** அதிகம் **किं भोज्यं** சாப்பிடக்கூடியதா என்ன? **भार्याभोगादपि** தன் பத்தினியை யனுபவிப்பதைக் காட்டிலும் **पण्यकान्तासु** விலைமாதர்களிடம் **कः भोगः** எவ்விதமான (மேலான) ஸுகம் **भवति** ஏற்படுகிறது? **नेति** வேண்டாமென்று **श्रुतिविषयता** வேதங்களில் கூறப்பட்டிருப்பதே **प्रायः** அநேகமாய் **विश्वमाधुर्यहेतुः** ஜனங்களுக்கு ருசியை யுண்டுபண்ணக்கூடியதா யிருக்கிறது.

(ஆழ்ந்து யோசிக்குங்கால்) ருஜுவான வழியில் ஸம்பாதிப்பதைவிட அதிகம் அநியாய வழியில் சம்பாதிக்க முடியாது. விதிப்படி தயார்செய்து புசிக்கப்படும் அன்னத்தைக்காட்டிலும் கண்ட இடங்களில் கண்டவர்கள் தயார் செய்த அசுத்தமான பக்ஷ்யபோஜ்யங்களை அதிகமாகப் புசித்துவிட முடியுமா? தன் பாரியையின் ஸம்போகத்தைவிட வேசியர் ஸங்கமம் எவ்விதத்தில் சிலாக்கியமானது? ஜனங்களுக்குக் குற்றமுள்ள விஷயங்களில் ருசியேற்படுவதற்கு வேதங்கள் அவைகளை நிஷேதிப்பதே காரணம் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் வேண்டாமென்று தடுத்தால் அதில் ஜனங்களுக்குச் சபலம் உண்டாவது ஸஹஜம்.

**आस्तिक्यं चेद्धनमखिलमप्यर्थिसात्कर्तुमर्हं**
**नास्तिक्यं चेत्तदपि सुतरां भोगहेतोरपास्यम् ।**
**अस्पृष्ट्वाऽपि स्वयमतिरहः स्थाप्यते यत्तदन्त-**
**स्तस्मिन् हेतुः क इति निभृतं तर्कयामो न विद्मः ॥ २९ ॥**

ஆஸ்திக்யம் சேதி³யுனமகிலமப்யர்த்திஸாத்கர்(த்)துமர்ஹம்
நாஸ்திக்யம் சேத்தத³பி ஸுதராம் போ⁴க³ஹேதோரபாஸ்யம் |
அஸ்ப்ருஷ்ட்வா'பி ஸ்வயமதிரஹ: ஸ்தா²ப்யதே யத்தத³ந்தஸ்-
தஸ்மின் ஹேது: க இதி நிப்⁴ருதம் சி(ச்)ந்தயாமோ ந வித்³ம: || 29

**आस्तिक्यं चेत्** நம்பிக்கையிருந்தால் **अखिलमपि धनं** எல்லா திரவியமும் **अर्थिसात्कर्तुम् अर्हम्** வேண்டுபவர்களுக்கு அர்ப்பணம் செய்துவிடத் தக்கது; **नास्तिक्यं चेदपि** நம்பிக்கையில்லாவிடிலோ **तत्** அந்த திரவியம் **सुतरां** மிகவும் **भोगहेतोः** (தான்) அனுபவிப்பதின் பொருட்டு **अपास्यं** செலவிடத்தகுந்தது; **स्वयम् अपि** தானும் **अस्पृष्ट्वा** தொடாமல் **तत्** அது **अन्तः** உள்ளே **अतिरहः** வெகு மறைவாக **यत् स्थाप्यते** வைக்கப்படுகிறதே **तस्मिन्** அதற்கு **हेतुः कः इति** என்ன காரணம் என்று **निभृतं चिन्तयामः** தனித்து யோசனை செய்து பார்க்கிறோம்; (ஆனால்) **न विद्मः** (நாம் அதை) அறியவில்லை.

ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களில் சொல்லப்பட்ட தருமங்களை நம்பினால் பரலோகத்தில் க்ஷேமமடைவதன் பொருட்டு ஸம்பாதித்த திரவியத்தை ஸத்பாத்திரத்தில் தானம் செய்துவிடவேண்டும். அப்படி நம்பிக்கையில்லாவிடில், தான் அனுபவிக்கும்பொருட்டு அந்த திரவியத்தைச் செலவு செய்துவிடவேண்டும். சில லோபிகள் இரண்டுமில்லாமல் அதை மறைத்து வைப்பதன் காரணம் புலப்படவில்லை.

श्वानः पुच्छाञ्चलकुटिलतां सूकराः कुक्षिपोषं
कीशा दन्तप्रकटनविधिं गर्दभा रूक्षघोषम् ।
मर्त्या वक्षःश्वयथुमपि च स्त्रीषु दृष्ट्वा रमन्ते
तत्सौन्दर्यं किमिति फलितं तत्तदज्ञानतोऽन्यत् ॥ ३० ॥

ஶ்வான: புச்சா²ஞ்சலகுடிலதாம் ஸூகரா: குக்ஷிபோஷம்
கீஶா த³ந்தப்ரகடனவிதி⁴ம் க³ர்த³பா⁴ ரூக்ஷகோ⁴ஷம் |
மர்த்யா வக்ஷ:ஶ்வயது²மபி ச ஸ்த்ரீஷு த்³ருஷ்ட்வா ரமந்தே
தத்ஸௌந்த³ர்யம் கிமிதி ப²லிதம் தத்தத³ஜ்ஞானதோ'ன்யத்|| (30)

**श्वानः** நாய்கள் **पुच्छाञ्चलकुटिलतां** வால்நுனியின் கோணலையும் **सूकराः** பன்றிகள் **कुक्षिपोषं** வயிற்றின் உப்புதலையும் **कीशाः** குரங்குகள் **दन्तप्रकटनविधिं** பல் இளிப்பதையும் **गर्दभाः** கழுதைகள் **रूक्षघोषं** வரட்டுச் சத்தத்தையும் **मर्त्याः** மனிதர்கள் **वक्षःश्वयथुमपि** மார்வீக்கத்தையும் **स्त्रीषु** ஸ்திரீ ஜாதியினிடத்தில் **दृष्ट्वा** பார்த்து **रमन्ते** காமவெறியடைகின்றனர். **तत्तदज्ञानतोऽन्यत्** அந்தந்தப் பிராணிகளின் அறிவீனத்தைத் தவிர **तत्सौन्दर्यं** அந்தந்த ஸ்திரீ ஜாதியின் அழகு **किमिति** எவ்விதத்தில் **फलितम्** ஏற்பட்டது.

பிராணிகள் தன்தன் இனத்திற்குத் தக்கபடி சிற்சில அம்சங்களை ஸ்திரீ ஜாதியினிடத்தில் கண்டு காமத்தை யடைகின்றன. விசாரிக்குங்கால், அந்தந்த அம்சங்களால் அந்தந்த ஸ்திரீ ஜாதியின் அழகு புமானை மோஹிக்கும்படி செய்யத் தக்கதாக ஏற்பட்டுவிட்டதாய்ச் சொல்ல இடமில்லை. ஆனாலும், இந்த மோஹம் ஏற்படுவது வாஸ்தவம். இஃது அந்தந்தப் பிராணிகளின் அறிவீனத்தைத் தவிர வேறு யாதொன்றுமில்லை என்று விவேகிகள் அறிவார்கள்.

रन्तुं प्राप्तो दशति दशनैराननं चेत्प्रियाया
भोक्तुं प्राप्तः किमिति न दशेदग्रहस्तं प्रदातुः ।
इत्थं व्यक्ते हृदयजनुषः पामरोन्मादकत्वे
हातुं सद्यः प्रभवति न कोऽप्यन्ततो लज्जितुं वा ॥ ३१ ॥

ரந்தும் ப்ராப்தோ ஦ஶதி ஦ஶனைராననம் சேத் ப்ரியாயா
போக்தும் ப்ராப்தஃ கிமிதி ந ஦ஶே஦க்ரஹஸ்தம் ப்ர஦ாதுஃ |
இத்தம் வ்யக்தே ஹ்ருதயஜனுஷஃ பாமரோன்மா஦கத்வே
ஹாதும் ஸத்யஃ ப்ரபவதி ந கோ'ப்யந்ததோ லஜ்ஜிதும் வா ॥ (31)

**रन्तुं प्राप्तः** கிரீடிக்க வந்தவன் **प्रियायाः** காதலியின் **आननं** முகத்தை **दशनैः** பற்களால் **दशति चेत्** கடிப்பதென்றிருந்தால் **भोक्तुं प्राप्तः** சாப்பிட வந்தவன் **प्रदातुः अग्रहस्तं** பரிமாறு

பவனுடைய கைவிரலை **किमिति न दशेत्** ஏன் கடிக்கக் கூடாது? **इत्थं** இவ்விதம் (பார்க்குங்கால்) **हृदयजनुषः पामरोन्मादकत्वे** மன்மதன் அறிவில்லாதவர்களை மயக்குகிறவன் (என்பது) **व्यक्ते** நன்கு விளங்கினாலும் **कोऽपि** ஒருவனும் **सद्यः** உடனே **हातुं** விட்டுவிட **न प्रभवति** சக்தியுள்ளவனாவதில்லை. **अन्ततः** கடைசி பக்ஷத்தில் **लज्जितुं वा (न प्रभवति)** வெட்கப்படக் கூடியவனாகவுமில்லை.

ஸ்திரீ ஸம்போகத்திற்கும் உதட்டைக் கடிப்பதற்கும் என்ன ஸம்பந்தம்? அப்படியானால் சாப்பிட வந்தவன் அன்னம் வழங்குபவரின் கையைக் கடிக்கலாமே. யோசித்துப்பார்த்தால் மன்மதக் குழப்பம் மதியீனமே; ஆனால், அதைத் தவிர்க்க யாரால் ஸாத்தியமாகின்றது? யார்தாம் அதனால் லஜ்ஜையை மட்டுமாவது அடைகிறார்கள்?

**दाराः पुत्राः शयनमशनं भूषणाच्छादने वा**
**यच्चेदृक्षं पुमभिलषितं तेषु माशब्दिकः कः।**
**किं त्वेतेषां भवति नियमः सेवने कोऽपि कोऽपि**
**द्वेषस्तस्मिन्नपि यदि भवेत्तत्र वक्ता कृतान्तः॥ ३२॥**

தாரா꞉ புத்ரா꞉ ஶயனமஶனம் பூஷணாச்சாதனே வா
யச்சேத்ருக்ஷம் புமபிலஷிதம் தேஷு மாஶப்திக꞉ க꞉ |
கிம் த்வேதேஷாம் பவதி நியம꞉ ஸேவனே கோ'பி கோ'பி
த்வேஷஸ்தஸ்மின்னபி யதி பவேத் தத்ர வக்தா க்ருதாந்த꞉ ॥ (32)

**दाराः** மனைவி **पुत्रः** பிள்ளை **शयनं** படுக்கை **अशनं** சாப்பாடு **भूषणाच्छादने वा** ஆபரணம் ஆடை **ईदृक्षं** இதுபோன்ற **पुमभिलषितं यच्च** மானிடர்கள் வேண்டுவது எது எதுவோ **तेषु** அவைகளில் **कः माशब्दिकः** வேண்டாமென்று யார் தடுத்தார்கள்? **किन्तु** ஆனால் **एतेषां सेवने** இவைகளை அனுபவிப்பதில் **कोऽपि कोऽपि** ஒவ்வொரு **नियमः** அளவு **भवति** ஏற்பட்டிருக்கிறது; **तस्मिन् अपि** அதில்கூட **यदि द्वेषः भवेत्**

வெறுப்பு உண்டானால் **तत्र** அவ்விஷயத்தில் **कृतान्तः** யமன் **वक्ता** பதில் சொல்வான்.

மனிதன் இச்சைப்படும் எந்த ஸௌக்கியத்தையும் சாஸ்திரங்கள் நிஷேதிக்கவில்லை. ஆனால் அவைகளை யடைவதிலும் அனுபவிப்பதிலும் சில விதிகளை, நம் க்ஷேமத்தை யுத்தேசித்தே, அவைகள் ஏற்படுத்தியிருக்கின்றன. அவ்விதிகளை இடையூறுகளாய் எண்ணி உல்லங்கனம் செய்வாயானால், உனக்கு யமன் முன்னிலையில் தண்டனை ஏற்படுமென்பது திண்ணம்.

**वेदाभ्यासव्यसनरसिकैः स्थीयते तावता किं**
**सूक्ष्मा बुद्धिः श्रुतमिव विशत्यश्रुतं तावता किम् ।**
**जल्पारम्भे जयति नियतं वादिनस्तावता किं**
**निर्वेदार्तं न यदि हृदयं शान्तिमभ्येति पुंसः ॥ २३ ॥**

வேதாப்யாஸவ்யஸனரஸிகைஃ ஸ்தீயதே தாவதா கிம்
ஸூக்ஷ்மா புத்திஃ ஶ்ருதமிவ விஶத்யஶ்ருதம் தாவதா கிம் |
ஜல்பாரம்பே ஜயதி நியதம் வாதினஸ்தாவதா கிம்
நிர்வேதார்(த்)தம் ந யதி ஹ்ருதயம் ஶாந்திமப்யேதி பும்ஸஃ ||

**वेदाभ्यासव्यसनरसिकैः स्थीयते** வேதங்களைப் படிப்பதில் ஊக்கமுள்ளவர்களாக இருந்து **तावता किं** என்ன பிரயோஜனம்? **सूक्ष्मा बुद्धिः** கூர்மையான புத்தி **श्रुतमिव** கேட்டதைப் போல **अश्रुतं विशति** கேட்காததையும் அறிகிறதென்றாலும் **तावता किं** என்ன கிடைத்துவிட்டது? **जल्पारम्भे** பேச ஆரம்பிக்கும்போதே **नियतं** நிச்சயமாய் **वादिनः** எதிர்வாதம் செய்கிறவர்களை **जयति** ஜயித்துவிடுகிறான் என்றாலும் **तावता किं** என்ன ஸாதித்துவிட்டான்? **निर्वेदार्तं पुंसः हृदयं** வைராக்கியத்தினால் மனுஷ்யனுடைய மனம் ஒழிவடைந்து **शान्तिं** அமைதியான நிலையை **न अभ्येति यदि** அடையவில்லையென்றால் (மற்றவைகளினால் என்ன பலன்?)

வேதம் ஓதியும் சாஸ்திர வல்லமை இருந்தும் பேச்சுத் திறமை இருந்தும் முடிவில் ஒன்றும் பயனில்லை. மனுஷ்யனுக்கு முக்கியமானது வைராக்கியத்தினால் மனம் அடங்க வேண்டியது. இதன்றி மற்ற புகழெல்லாம் வீணே.

यस्त्वत्यन्तव्यवसितमतिः संजिघृक्षेत धर्मं
खट्वाङ्गादेरिव न किमलं तस्य यामार्धमायुः ।
दुष्पाण्डित्यादपहृतमतिर्यः पुनः संशयात्मा
कस्मै तस्य प्रभवतु वृथा काकवद्दीर्घमायुः ॥ ३४ ॥

யஸ்த்வத்யந்தவ்யவஸிதமதிஃ ஸம்ஜிக்ருக்ஷேத தர்மம்
வட்வாங்காதேரிவ ந கிமலம் தஸ்ய யாமார்தமாயுஃ |
துஷ்பாண்டித்யாதபஹ்ருதமதிர்யஃ புனஃ ஸம்ஶயாத்மா
கஸ்மை தஸ்ய ப்ரபவது வ்ருதா காகவத்தீர்கமாயுஃ ‖ (34)

**यः तु** எவனொருவன் **अत्यन्तव्यवसितमतिः** திடமான புத்தி தீர்மானத்துடன் **धर्मं** தருமத்தை **संजिघृक्षेत** ஸம்பாதிக்க ஆவலுடையவனோ **तस्य** அவனுக்கு **खट्वाङ्गादेरिव** கட்வாங்கர் முதலியவர்களுக்குப்போல **यामार्धं** பாதியாமம் **आयुः** ஆயுள் **किं न अलं** போதாதா? **यः पुनः** எவனொருவன் **दुष्पाण्डित्यात्** வித்தை கற்றவன் என்ற அகம்பாவத்துடன் **अपहृतमतिः** புத்தி கெட்டு **संशयात्मा** பலவிதங்களில் தடுமாறுகிறானோ **तस्य** அவனுக்கு **काकवत्** காக்கைக்கு இருப்பது போல **वृथा** வியர்த்தமான **दीर्घम् आयुः** நீண்ட ஆயுள் (இருந்தும்) **कस्मै प्रभवतु** எதற்கு ஆகப்போகிறது?

சாஸ்திரம் படித்து கோணக்கக்ஷிகளில் புத்தியைத் தீட்டி ஊர்ஜிதமான தருமப் பிரவிருத்தியில்லாமல் ஸந்தேஹங்கள் பல வளர்த்துவரும் பண்டிதர்களுக்கு காக்கைக்கு இருப்பதுபோல் எண்ணிறந்த வாழ்நாள்கள் இருப்பினும் ஒன்றுக்கும் உதவாது. நிச்சய புத்தியுடையவன் கட்வாங்கரைப்

போல ஸ்வல்ப காலத்திலேயே சிரேயஸ்ஸை அடையக் கூடும்.

குறிப்பு :—கட்வாங்கர் என்ற ராஜர்ஷி தேவர்களிடமிருந்து தம் ஆயுள் ஒருமுஹூர்த்த காலம் தான் பாக்கியிருக்கிறதென்று தெரிந்து கொண்டு, அதற்குள்ளேயே வைராக்யத்தை வஹித்து, ஹரியைச் சரணமாக அடைந்து முக்தியைப் பெற்றார் (பாகவதம் 2 ஸ்கந்தம் முதல் அத்தியாயம்).

**अर्था न स्युर्यदि विजहिमो धर्ममर्थैकसाध्यं**
**कायक्लेशैः कतिकतिविधः साधनीयो न धर्मः ।**
**कायः श्रान्तो यदि भवति कस्तावता धर्मलोप-**
**श्चित्तं दत्त्वा सकृदपि शिवे चिन्तितं साधयामः ॥ ३५ ॥**

அர்த்தா ந ஸ்யுர்யதி விஜஹிமோ தர்மமர்த்தைகஸாத்யம்
காயக்லேஶை: கதிகதிவித: ஸாதனீயோ ந தர்ம: |
காய: ஶ்ராந்தோ யதி பவதி கஸ்தாவதா தர்மலோபஶ்-
சித்தம் தத்த்வா ஸக்ருதபி ஶிவே சிந்திதம் ஸாதயாம: ॥ (35)

**अर्थाः यदि न स्युः** பணம் இல்லையென்றால் **अर्थैकसाध्यम्** பணத்தினாலேயே ஆகக்கூடிய **धर्मं** தருமத்தை **विजहिमः** விட்டுவிடுவோம். **कतिकतिविधः** எத்தனை விதமான **धर्मः** தருமம் **कायक्लैशैः न साध्यः** சரீரப் பிரயாசையினால் ஆகக்கூடியதாக இல்லை? **यदि कायः श्रान्तः भवति** சரீரம் களைப்படைந்துவிடுமேயானால் **तावता** அதனால் மட்டும் **कः धर्मलोपः** தர்மம் அற்றுப் போய்விடுமா? **सकृदपि** ஒருதடவையாவது **शिवे** ஈச்வரனிடத்தில் **चित्तम्** மனதை **दत्त्वा** அர்ப்பணம் செய்துவிட்டு **चिन्तितम्** அபீஷ்டத்தை **साधयामः** அடையலாம்.

தரும காரியங்களைச் செய்யப் பணம் அவசியமில்லை. தருமம் பணத்தினால் மட்டுமன்று, சரீரப் பிரயாசையினாலும் ஸம்பாதிக்கத் தக்கது. சரீரத்தைச் சிரமப்படுத்த முடியாதென்றால், மனதை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்துவிட

லாமல்லவா? ஒரு கணமாவது பரமேச்வரனைச் சரணமடைந்தால், அவர் நம் ஸர்வ அபீஷ்டங்களையும் பூர்த்தி செய்வார்.

குறிப்பு :—உலகத்தில் சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டு சுயேச்சையாய் ஜனங்கள் இருக்க விரும்புகிறார்கள். நிச்சய புத்தி யேற்பட்டுவிட்டால் நற்கதியடையலாம்.

**स्वेनैवोक्तं निगमवचसा बोधनीयास्तु जीवा**
**जीवैरेवेत्यपि च मुनिभिः कारितं धर्मशास्त्रम् ।**
**उत्पश्यन्तु स्वयमिति भवो दारुणश्चाल्यतेऽसा-**
**वद्यापि स्मो यदि खलु जडाः किं विधत्तां शिवोऽपि ॥२६॥**

ஸ்வேனைவோக்தம் நிகமவசஸா போதனீயாஸ்து ஜீவா
ஜீவைரேவேத்யபி ச முனிபி: காரிதம் தர்மஶாஸ்த்ரம் |
உத்பஶ்யந்து ஸ்வயமிதி பவோ தாருணஶ்சால்யதே'ஸா-
வத்யாபி ஸ்மோ யதி கலு ஜடா: கிம் விதத்தாம் ஶிவோ'பி ||

**निगमवचसा** வேதவாக்கியங்களால் **स्वेनैव उक्तं** தானாகவே வெளிப்படுத்தியிருப்பதை **जीवाः** மானிடர்கள் **जीवैरेव तु** மானிடர்களாலேயே **बोधनीयाः** உபதேசிக்கத்தகுந்தவர்கள் **इत्यपि च** என்றும் (எண்ணி) **मुनिभिः** ரிஷிகளைக்கொண்டு **धर्मशास्त्रं** தர்மசாஸ்திரம் **कारितम्** செய்விக்கப்பட்டது. **स्वयं** தனக்குத்தானே **उत्पश्यन्तु** தெரிந்து கொள்ளட்டும் **इति** என்று **असौ** இந்த **दारुणः भवः** பயங்கரமான உலகவாழ்க்கை **चाल्यते** நடத்திவைக்கப்படுகிறது. **अद्यापि खलु** இப்பொழுது கூட **यदि जडाः स्मः** நாம் மூடர்களா யிருப்போமானால் **शिवोऽपि** ஈச்வரன்தான் **किं विधत्ताम्** என்னசெய்யக்கூடும்?

ஈச்வரன் வேதங்களை யுபதேசித்தார். பின்பு வேதங்களின் அர்த்தத்தை மனுஷ்யர்களைக் கொண்டே மனுஷ்யர்களுக்குச் சொல்லவேண்டுமென்று மஹர்ஷிகளைக் கொண்டு லோகத்தில் விளங்கச் செய்தார். மனுஷ்ய வாழ்க்கையில் ஸாரமில்லையென்று காண்பிக்கவே அவர் இந்த கோரமான

ஜனன மரணக் கிலேசங்களை நம்முன் பரப்புகிறார். இன்னும் நமக்கு விவேகம் உண்டாகவில்லை. சிற்றின்பத்திலேயே உழலுகிறோம் என்றால் அவர்தான் என்ன செய்வார்?

येनाचान्ताः सलिलनिधयो येन सृष्टा प्रतिद्यौः
शस्त्राण्यस्त्राण्यपि कबलितान्येकया यस्य यष्ट्या ।
कस्तादृक्षः प्रभवतु जनो देवभूदेववर्गे
कालः कीटानिव कबलयामास तानप्ययत्नम् ॥ ३७ ॥

யேனாசாந்தா: ஸலிலநிதயோ யேன ஸ்ருஷ்டா ப்ரதித்யௌ:
ஶஸ்த்ராண்யஸ்த்ராண்யபி கபலிதான்யேகயா யஸ்ய யஷ்ட்யா
கஸ்தாத்ருக்ஷ: ப்ரபவது ஜநோ தேவபூதேவவர்கே
காலஃ கீடானிவ கபலயாமாஸ தானப்யயத்னம் ॥ (37)

**येन** எவரால் **सलिलनिधयः** ஸமுத்திரங்கள் **आचान्ताः** ஆசமனம் செய்யப்பட்டனவோ **येन** எவரால் **प्रतिद्यौः** வேறு சுவர்க்கம் **सृष्टा** ஸ்ருஷ்டிக்கப்பட்டதோ **यस्य** எவருடைய **एकया यष्ट्या** ஒரு தண்டத்தினால் **शस्त्राणि अस्त्राणि अपि** ஆயுதங்களும் அஸ்திரங்களும், **कबलितानि** விழுங்கப் பட்டனவோ **देवभूदेववर्गे** தேவர்களின் இடையிலும் பிராம்மணர்களின் இடையிலும் **तादृक्षः जनः** அப்படிப்பட்டவன் **कः प्रभवतु** எவன் இருப்பான்? **तानपि** அவர்களைக்கூட **कालः** காலம் **कीटान् इव** புழுக்களைப்போல **अयत्नम्** லகுவாக **कबलयामास** விழுங்கி விட்டது.

ஸமுத்திரத்தைப் பானம் செய்த அகஸ்தியரும் புதிய ஸ்வர்க்கலோகத்தை சிருஷ்டித்த விசுவாமித்திரரும் விசுவாமித்திரரின் அஸ்திர சஸ்திரங்களைத் தன் பிரம்மதண்டத்தினால் வியர்த்தமாகச் செய்த வசிஷ்டரும், காலத்திற்கு இரையானார்கள். அவர்களுக்குச் சமானமானவர்கள் தேவலோகத்திலும் பூலோகத்திலும் ஒருநாளும் கிடையாது. அவர்

களின் கதியே அவ்விதம் என்றால், நாம் சாச்வதம் என்று நினைத்துக்கொண்டிருப்பது பேதைமை அல்லவா? ஆகையால் இந்த தேகமுள்ளபோதே நம் நன்மைக்கு முயலவேண்டும்.

**कायस्थैर्यं करणपटुतां बन्धुसंपत्तिमर्थं**
**चातुर्यं वा किमिव हि बलं बिभ्रतो निर्भराः स्मः ।**
**अन्त्यः श्वासः किमयमथवोपान्त्य इत्यामृशन्तो**
**विस्मृत्येशं निमिषमपि किं वर्तितुं पारयामः ॥ ३८ ॥**

காயஸ்தைர்யம் கரணபடுதாம் பந்து-ஸம்பத்திமர்தம்
சாதுர்யம் வா கிமிவ ஹி பலம் பிப்ரதோ நிர்பராஸ்ஸ்மஃ |
அந்த்யஃ ஶ்வாஸஃ கிமயமதவோபாந்த்ய இத்யாம்ருஶந்தோ
விஸ்ம்ருத்யேஶம் நிமிஷமபி கிம் வர்(த்)திதும் பாரயாமஃ || (38)

**कायस्थैर्यम्** சரீரதிடத்தையும் **करणपटुताम्** இந்திரியங்களின் சுறுசுறுப்பையும் **बन्धुसंपत्तिम्** பந்துக்களின் சேர்க்கையையும் **अर्थं** பணத்தையும் **चातुर्यं वा** ஸாமர்த்தியத்தையும் **बलं किमिव हि** இன்னும் என்னென்னவோ பலத்தையும் **बिभ्रतः** உடையவர்களாகி **निर्भराः स्मः** (நாம்) கவலையற்று மகிழ்ச்சியுடன் வாழ்கிறோம். **अयं** இது **अन्त्यः श्वासः किं** கடைசி மூச்சோ **अथवा** அல்லது **उपान्त्यः** அதற்கு முந்தியதோ **इति आमृशन्तः** என்று யோசித்தால் **निमिषमपि** ஒரு கணமேனும் **ईशं विस्मृत्य** ஈசனை மறந்து **वर्तितुम्** இருக்க **किं पारयामः** நம்மால் முடியுமா?

நாம் சரீரபலம், ஐம்புலன்களின் வன்மை, பந்துக்களின் கூட்டுறவு, ஐச்வர்ய மிகுதி, புத்தி சாதுரியம் முதலியவைகளினால் லோகத்தில் பெருமையடைந்து பரிபூர்ணமான வாழ்வில் மகிழ்கின்றோம். ஆனால், மரணம் உண்டென்றும் அது இந்த நிமிஷமோ அல்லது அடுத்த நிமிஷமோ நம்மைக் கொண்டேபோய்விடும் என்றும் சற்று ஆலோசித்துப் பார்த்தோமேயானால் ஒவ்வொரு நிமிஷத்திலும் பரமேஶ்வரனைத் தியானித்து நாம் நற்கதியடையவேண்டுவோம்.

अभ्यस्यादौ श्रुतिमथ गृहं प्राप्य लब्ध्वा महार्था-
निष्ट्वा यज्ञैर्जनिततनयः प्रव्रजेदायुषोऽन्ते ।
इत्याचष्टे य इह स मनुर्याज्ञवल्क्योऽपि वा मे
तावत्कालं प्रतिभवति चेदायुषस्तत्प्रमाणम् ॥ ३९ ॥

அப்யஸ்யாதௌ ஶ்ருதிமத க்ருஹம் ப்ராப்ய லப்த்வா மஹார்தா-
னிஷ்ட்வா யஜ்ஞைர்ஜனிததனய: ப்ரவ்ரஜேதாயுஷோ'ந்தே |
இத்யாசஷ்டே ய இஹ ஸ மனுர்யாஜ்ஞவல்க்யோ'பி வா மே
தாவத்காலம் ப்ரதிபவதி சேதாயுஷஸ்தத்ப்ரமாணம் ॥ (39)

**आदौ** முதலில் **श्रुतिम् अभ्यस्य** வேதம்பயின்று **अथ** பின்பு **गृहं प्राप्य** வீட்டையடைந்து **महार्थान् लब्ध्वा** அதிகப்பணத்தைச் சம்பாதித்து **जनिततनयः** புத்திரனை உண்டுபண்ணிவிட்டு **यज्ञैः इष्ट्वा** யாகங்களைச்செய்து **आयुषोऽन्ते** ஆயுள் இறுதியில் **प्रव्रजेत्** ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள வேண்டும் **इति** என்று **इह** இங்கு **यः मनुः याज्ञवल्क्यो वा** எந்த மனுவோ யாஜ்ஞவல்கியரோ **आचष्टे** சொல்லுகிறரோ, **सः** அவர் **तावत्कालं** அவ்வளவு நீடித்தகாலம் **मे आयुषः** என் ஜீவதசைக்கு **प्रतिभवति चेत्** பொருப்பாளியானல் **तत्** அவர்வாக்கியம் **प्रमाणम्** அனுஷ்டிக்கத் தக்கதுதான்.

மனு யாஜ்ஞவல்க்யர் முதலிய தருமசாஸ்திரக்காரர்கள், ஆச்ரம விதிகளை விவரிக்குங்கால், பிரம்மசரியத்தில் வேதங்களை அப்பஸித்து, பின்பு கிருஹஸ்தனுகி புத்திரர்களையும் பெற்று, யாகங்களை அனுஷ்டித்துக் கடைசியாக எல்லாவற்றையும் துறக்கவேண்டும் என்று உபதேசிக்கிறார்களே, நான் அவ்வளவு நீண்டகாலம் உயிரோடிருப்பதற்கு இவர்கள் ஜவாப்தாரிகள் ஆவார்களா?

**குறிப்பு** :—ஆயுள் பிரமாணம் நிச்சயம் இல்லை ஆதலால் வெகு சீக்ரமே பந்தங்களைக் களைந்து முக்தி மார்க்கத்தைத் தேடவேண்டியது அவசியம்.

अन्नं धान्यं वसु वसुमतीत्युत्तरेणोत्तरेण
व्याकृष्यन्ते परमकृपणाः पामरा यद्वदित्थम् ।
भूमिः खं द्यौर्द्रुहिणगृहमित्युत्तरेणोत्तरेण
व्यामुह्यन्ते विमलमतयोऽप्यस्थिरेणैव धाम्ना ॥ ४० ॥

அன்னம் தான்யம் வஸு வஸுமதீத்யுத்தரேணோத்தரேண
வ்யாக்ருஷ்யந்தே பரமக்ருபணா: பாமரா யத்வதித்தம் |
பூமி: கம் த்யௌர் த்ருஹிண க்ருஹமித்யுத்தரேணோத்தரேண
வ்யாமுஹ்யந்தே விமலமதயோ'ப்யஸ்திரேணைவ தாம்னா ‖ (40)

**अन्नं** ஆஹாரம் **धान्यं** விளைபொருள் **वसु** செல்வம் **वसुमती** பூமி **इति इत्थं** என்றிப்படி **उत्तरेण उत्तरेण** மேல் மேல் **परमकृपणाः पामराः** மிக வருந்தத் தக்க அற்ப ஜனங்கள் **यद्वत्** எப்படி **व्याकृष्यन्ते** இழுக்கப்படுகிறார்களோ **तद्वत्** அப்படியே **भूमिः** பூலோகம் **खम्** ஆகாயம் **द्यौः** ஸ்வர்க்கம் **द्रुहिणगृहम्** பிரும்மலோகம் **इति** என்று **उत्तरेण उत्तरेण** மேல் மேல் **अस्थिरेणैव** நிலையில்லாத **धाम्ना** பதவியாலேயே **विमलमतयः अपि** அறிவாளிகள் கூட **व्यामुह्यन्ते** மோசம் போகிறார்கள்

பாமர ஜனங்கள் அன்னம், தான்யம், பணம், பூமி என்று மேல் மேல் எப்படிப் பேராசையை வளர்க்கிறார்களோ அப்படியே வித்வான்களான கர்ம மார்க்கத்தில் ஈடுபட்டவர்கள் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், பிரும்ம லோகம் என்று மேல் மேல் ஆசைப்படுகிறார்கள்.

குறிப்பு :—ஞான மார்க்கமே உண்மையான மார்க்கம், மற்றவை நிலையற்ற பதவிகளையே தருவன.

प्रायश्चित्तं सकृदुपनते वा प्रमादात्कृते वा
भूयो भूयोऽप्यवहिततरैः सोधिते कः समाधिः ।
कारुण्याब्धिर्यदि पुरहरः सत्सु कामं दयेत
भ्रष्टे मादृश्यपि स दयते चेत्क्षतो धर्मसेतुः ॥ ४१ ॥

ப்ராயஶ்சித்தம் ஸக்ருதுபனதே வா ப்ரமாதாத்க்ருதே வா
ஹூயோ ஹூயோ'ப்யவஹிததரை꞉ ஸாதிதே க꞉ ஸமாதி꞉ |
காருண்யாப்தி꞉ புரஹர꞉ ஸத்ஸு காமம் தயேத
ப்ரஷ்டே மாத்ருஶ்யபி ஸ தயதே சேத்க்ஷதோ தர்மஸேது꞉ || ()

**सकृदुपनते वा** ஒரு தடவை நடந்திருந்தாலும் **प्रमादात् कृते वा** அஜாக்கிரதையினுல் செய்யப்பட்டிருந்தாலும் **प्रायश्चित्तम्** பிராயச்சித்தம் உண்டு; **अवहिततरैः** மிகவும் கவனத்தைச் செலுத்தி **भूयो भूयोऽपि** திரும்பவும் திரும்பவும் **साधिते** செய்யப்பட்ட காரியத்தில் **कः समाधिः** என்ன ஸமாதானம் (சொல்லுகிறது)? **कारुण्याब्धिः** கருணைக்கடலான **पुरहरः** பரமசிவன் **सत्सु** ஸாதுக்கள் விஷயத்தில் **कामं यदि दयेत** தயவு செய்யக்கூடும் என்றாலும், **भ्रष्टे मादृशि अपि** பதிதனை என் போன்றவன் விஷயத்திலும் **स दयते चेत्** அவர் தயவுசெய்வாராகுல் **धर्मसेतुः** தர்மத்தின் எல்லை **क्षतः** உடைபட்டுப் போகும்.

ஈச்வரனுடைய கருணையைப் பெற ஸாதுக்களே உரியவர்கள்; என் போன்றவர்கள் ஏதோ அறியாமையால் ஒரு தடவை பாபம் செய்பவர்கள் அல்லர்; இடைவிடாமல் வேண்டுமென்றே பாபம் செய்பவர்கள். எங்களுக்குப் பிராயச்சித்தமே கிடையாது. எங்கள் விஷயத்தில் இரங்குவாரேயாகுல் ஈச்வரனே தருமவரையறைகளை அவமதித்தவராவர்.

साध्या शंभोः कथमपि दयेत्यप्यसाध्योपदेशः
कोपं तस्य प्रथममपनुद्यैव साध्यः प्रसादः ।
कोपो वर्णाश्रमनियमिताचारनिर्लङ्घनोत्थः
शान्तिं नेयः स कथमधुनाऽप्यव्यवस्थाप्रवृत्तैः ॥ ४२ ॥

ஸாத்யா ஶம்போ꞉ கதமபி தயேத்யப்யஸாத்யோபதேஶ꞉
கோபம் தஸ்ய ப்ரதமமபநுத்யைவ ஸாத்ய꞉ ப்ரஸாத꞉ |
கோபோ வர்ணாஶ்ரமநியமிதாசாரநிர்லங்கனோத்த꞉
ஶாந்திம் நேய꞉ ஸ கதமதுனா'ப்யவ்யவஸ்தாப்ரவ்ருத்தை꞉ ||

**कथमपि** எப்படியாவது **शंभोः** ஈச்வரனுடைய **दया** தயவு **साध्या** ஸம்பாதிக்கப்பட வேண்டியது **इति** என்பது **असाध्योपदेशः** நடைபெறுததை யுபதேசிப்பதாகும். **तस्य कोपं** அவருடைய கோபத்தை **प्रथमम्** முதலில் **अपनुद्यैव** போக்கடித்துத்தானே **प्रसादः साध्यः** அனுக்கிரகத்தைப் பெறவேண்டும். **वर्णाश्रमनियमिताचारनिर्लङ्घनोत्थः** வர்ணம் ஆச்ரமம் இவைகளில் ஏற்படுத்தப்பட்ட ஆசாரங்களை மீறினதால் உண்டான **सः कोपः** அந்தக் கோபம் **अधुनाऽपि** இப்போதுகூட **अव्यवस्थाप्रवृत्तैः** வரையறைகளை மீறி நடந்துவரும் நம்மால் **कथं शान्तिं नेयः** எப்படிப் போக்கடிக்கக் கூடியதாகும்?

ஈச்வரனுடைய தயவை அடைய நாங்கள் எவ்விதத்திலும் தகுதியில்லாதவர்கள்; ஏனெனில் வர்ணம், ஆச்ரமம் என்ற வரையறைகளை லக்ஷ்யம் செய்யாமல் தோன்றியபடி துஷ்டச் செயல்களைச் செய்துகொண்டு அவருக்குக் கோபத்தையுண்டுபண்ணி யிருக்கிறோம். அவர் கோபத்தைப் போக்கடித்த பிறகு அல்லவா, அவருடைய தயவை எதிர்பார்க்கலாம். எங்கள் நடையை இன்னமும் திருத்திக் கொள்ளாத நாங்கள் அவருடைய கோபத்தை எப்படித் தணியவைக்கப் போகிறோம்?

इष्टापूर्तैर्निगमपठनैः कृच्छ्रचान्द्रायणाद्यैः
स्वामिन्नन्यैरपि तव मनः काममावर्जयेम ।
मध्ये मध्ये यदि न निपतेत् कर्मणा चोदितानां
ज्ञानं श्रद्धेत्युभयमपि नो जातिवैयर्ग्लेव ॥ ४३ ॥

இஷ்டாபூர்(த்)தைர்நிகமபடனை: க்ருச்ச்ரசாந்த்ராயணாத்யை:
ஸ்வாமின்னன்யைரபி தவ மந: காமமாவர்ஜயேம |
மத்யே மத்யே யதி ந நிபதேத் கர்மணா சோதிதானாம்
ஜ்ஞானம் ச்ரத்தேத்யுபயமபி நோ ஜாதிவையர்க்லேவ ॥ (43)

**स्वामिन्** பிரபுவே **इष्टापूर्तैः** யஜ்ஞம் செய்தல் குளம் வெட்டுதல் முதலிய தருமங்கள் மூலமும் **निगमपठनैः** வேதாத்ய

யனம் செய்வதாலும் **कृच्छचान्द्रायणाद्यैः** கிருச்ரம் சாந்திராயணம் போன்ற விரதங்களை யனுஷ்டிப்பதாலும் **अन्यैरपि** மற்ற வழிகளாலும் **तव मनः** உன் மனதை **कामम् आवर्जयेम** ஒருவாறு கவர்ந்துவிடலாம்; (எப்போது என்றால்) **कर्मणा चोदितानां नः** பூர்வ வினையாலே தூண்டப்பட்ட நமக்கு **जातिवैरि ज्ञानं** பிறவிப் பகையான ஞானம் **श्रद्धा** சிரத்தை **इति उभयमपि** என்ற இவ்விரண்டும் **अर्गलेव** தாழ்ப்பாள்போல **मध्ये मध्ये** நடு நடுவே **यदि न निपतेत्** விழுந்துவிடாமல் இருக்குமேயானால். [**कर्मणां चोदितानां** என்ற பாடமும் உண்டு.]

கர்மாக்களைச் செய்து ஈச்வரனை ஆராதிப்போம் என்றால் விவேகம், சிரத்தையென்ற இவ்விரண்டும் கூடியிருந்தால் அல்லவா கர்மாக்களை ஈச்வரன் ஏற்றுக்கொள்வார். நமக்கோ ஜன்மாந்தர துர்வாஸனைகளால் இவ்விரண்டும் நடு நடுவே நழுவி விடுகின்றன. தாழ்ப்பாள் - கட்டை விழுவதால் வழி அடைபட்டுப் போவது போல், அவிவேகம் சிரத்தையின்மை இவையிரண்டும் குறுக்கே வந்து கர்மாக்களை நிஷ்பலமாகச் செய்துவிடுகின்றன. (பழைய காலத்து மணித் தாழ்ப்பாளை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அதில் இரண்டு நாக்குகள் உண்டு. அவைகளை விழாமல் திறவுகோலால் தாங்கிக்கொண்டு கட்டையை மெள்ளத் தள்ள வேண்டும்.)

**निर्मर्यादः परमचपलो निःसमाज्ञानराशि-**
**र्मादृक्षोऽन्यः क इति भुवने मार्गणीयं त्वयैव ।**
**ईदृक्षेऽपि क्वचिदिह दययेति कौतूहलं चेत्**
**स्वामिन् विश्वेश्वर तव भवं निस्तरेयं तदाऽहम् ॥ ४४ ॥**

நிர்மர்யாதஃ பரமசபலோ நிஃஸமாஜ்ஞானராஶிர்-
மாத்ருக்ஷோ’ன்யஃ க இதி ஹுவனே மார்கணீயம் த்வயைவ ।
ஈத்ருக்ஷே’பி க்வசிதிஹ தயயேதி கௌதூஹலம் சேத்
ஸ்வாமின் விஶ்வேஶ்வர தவ ஹவம் நிஸ்தரேயம் ததா’ஹம் ॥

**निर्मर्यादः** வரம்பு கடந்தவனும் **परमचपलः** மிகவும் நிலையற்ற மனதையுடையவனும் **निस्समाज्ञानराशिः** நிகரற்ற அறிவீனக் குவியலுமாய் **भुवने** பூலோகத்தில் **मादृक्षः** என்னைப்போல் **अन्यः कः** வேறு எவன் இருக்கிறான்? **इति** என்று **त्वयैव मार्गणीयम्** நீரே தேடிப் பார்க்கலாம். **स्वामिन् विश्वेश्वर** ஏ விச்வேச்வரப் பிரபுவே! **इह** இந்த லோகத்தில் **क्वचित्** எங்கேயாவது **ईदृक्षेऽपि** இத்தகையவன் விஷயத்திலேகூட **दयेय इति** தயவு காட்டுவேன் என்று **तव** உமக்கு **कौतूहलं चेत्** உற்சாகம் உண்டாகுமேயானால் **तदा** அப்போது **अहं** நான் **भवं** ஸம்ஸாரத்தை **निस्तरेयम्** தாண்டுவேன்.

ஈச்வர கிருபை எனக்கும் உண்டாக வேண்டுமானால், பின் வருமாறு ஏற்படலாம்:—எல்லாவித துர்குணங்களும் சேர்ந்து முற்றிலும் நிராகரிக்கத்தக்க ஜீவன் ஒருவனிடம் நம் தயவைக் காண்பிக்கவேண்டும் என்ற குதூஹலம் ஒரு வேளை பரமேச்வரனுக்கு ஏற்பட்டால் உலகமெங்கும் தேடினாலும் அவருக்கு என்னைத் தவிர வேறு மனிதன் கிடைக்க மாட்டான். அப்போது நான் நற்கதியடைவேன்.

पश्चात्तप्ताः कथमपि विधेः किंकरीभूय कुर्मः
सेवां शम्भोरिति च नियमं वाऽपि संकल्पयामः ।
आयुः किं मे किमिव करणं दुस्तरे संकटेऽस्मिन्
स्वामिन् गौरीरमण शरणं नस्त्वमेव त्वमेव ॥४५॥

பஶ்சாத்தப்தாஃ கதமபி விதேஃ கிங்கரீபூய குர்மஃ
ஸேவாம் ஶம்போரிதி ச நியமம் வா’பி ஸங்கல்பயாமஃ |
ஆயுஃ கிம் மே கிமிவ கரணம் துஸ்தரே ஸங்கடே’ஸ்மின்
ஸ்வாமின் கௌரீரமண ஶரணம் நஸ்த்வமேவ த்வமேவ ‖ (45)

**पश्चात्तप्ताः** பச்சாதாபம் அடைந்தவர்களாய் **विधेः किंकरीभूय** சாஸ்திர விதிகளுக்குக் கட்டுப்பட்டு **कथमपि** எப்படியாவது **शंभोः** ஈச்வரனின் **सेवां कुर्मः** உபாஸனையைச் செய்வோம்

**इति च** என்றுகூட **नियमं वापि** ஒரு நிபந்தனையை வேண்டுமானுலும் **संकल्पयामः** மனதில் ஏற்றுகொள்வோம். **मे आयुः किं** (ஆனால்) என் ஆயுள் எவ்வளவு? **करणं किमिव** ஸாதனந்தான் எது? **अस्मिन् दुस्तरे संकटे** இந்த வெல்ல முடியாத இடைஞ்சலில் **स्वामिन् गौरीरमण** ஏ பிரபோ, பார்வதீபதே! **नः** எமக்கு **त्वमेव त्वमेव** நீர்தான் நீர்தான் **शरणं** கதி.

ஆகமங்களில் சொல்லியபடி, உன் ஸேவையைச் செய்ய வேண்டுமென்ற ஸங்கல்பமானது பச்சாத்தாபத்தினுல் நல்ல புத்தியுண்டாகி ஒருகால் எனக்கு ஏற்பட்டாலும், என் ஸங்கல்பத்தை நிறைவேற்ற எனக்கு ஆயுஷ் காலமும் மற்ற ஸாதனங்களும் எங்கு கிடைக்கப்போகின்றன? ஆகையால், ஏ பார்வதீபதியே, நீயே சரணம் சரணம்.

सम्यङ्मुक्तास्त्रिभिरपि मलैश्चिद्विकासैकरूपा-
स्त्वन्निध्यानप्रवणमनसः सूरयस्त्वत्पुरे ये।
तेषां सन्दर्शयितुमपरिज्ञातपूर्वं कदाचि-
ज्जन्तुं मुग्धं शिव नयसि किं विश्वपारं पुरं माम् ॥ ४६ ॥

ஸம்யங்முக்தாஸ்த்ரிபிரபி மலைஶ்சித்விகாஸைகரூபாஸ்-
த்வன்னித்யானப்ரவணமநஸ: ஸூரயஸ்த்வத்புரே யே |
தேஷாம் ஸந்தர்ஶயிதுமபரிஜ்ஞாதபூர்வம் கதாசிஜ்-
ஜந்தும் முக்தம் ஶிவ நயஸி கிம் விஶ்வபாரம் புரம் மாம் || (46)

**शिव** ஹே சிவ! **त्रिभिरपि मलैः** மும்மலங்களினுல் **सम्यक् मुक्ताः** முற்றிலும் விடுபட்டவர்களும் **चिद्विकासैकरूपाः** ஞானப்ரகாச ஸ்வரூபமாகவே யிருப்பவர்களும் **त्वन्निध्यान-प्रवणमनसः** உன்னை தியானிப்பதில் செலுத்திய மனதோடு கூடியவர்களும் ஆக **त्वत्पुरे** உன் பட்டணத்தில் **ये सूरयः** எந்தப் பெரியோர்கள் இருக்கிறார்களோ **तेषाम्** அவர்களுக்கு **अपरिज्ञातपूर्वम्** முன் தெரியாத **मुग्धं जन्तुं** மூடனை ஒரு ஜீவனை **संदर्शयितुं** காண்பிக்க **मां** என்னை **विश्वपारं पुरं**

இவ்வுலகிற் கப்பாலுள்ள உன் பட்டணத்திற்கு **कदाचित्** ஒரு வேளை **किं नयसि** அழைத்துப் போவாயா?

முக்தி க்ஷேத்திரமாகிய உன் நகரத்தில் வஸிக்கும் ஞான ரூபிகளான உன் பக்தர்களுக்கு என்றும் கண்டறியாத பரம மூடமான ஒரு ஜந்துவை வேடிக்கைக்காக நீ கொண்டுபோய்க் காண்பிக்க நினைத்து என்னை யழைத்துப் போவாயானால், எனக்கு உன் ஸ்தானத்தை யடையும் அதிர்ஷ்டம் ஏற்படலாம். வேறு வழியில் கிடையாது.

குறிப்பு :— ஆணவம், மாயிகம், கார்மிகம் இவை மும்மலங்கள்; வாசிகம், காயிகம், மானஸம் எனச் சிலர் கூறுகின்றனர்.

**दिष्ट्या लब्धं द्विजवरकुले जन्म तत्रापि दिष्ट्या**
**धर्माधर्मस्थितिरवगतैव प्रसादाद्गुरूणाम् ।**
**जन्मन्यस्मिन्नपि यदि न मे संभवेदास्तिकत्वं**
**निस्तारः किं निरयभवनात् सर्वमोक्षेऽपि लभ्यः ॥ ४७ ॥**

திஷ்ட்யா லப்தம் த்விஜவரகுலே ஜன்ம தத்ரா'பி திஷ்ட்யா
தர்மாதர்மஸ்திதிரவகதைவ ப்ரஸாதாத் குரூணாம் ।
ஜன்மன்யஸ்மின்னபி யதி ந மே ஸம்பவேதாஸ்திகத்வம்
நிஸ்தாரः கிம் நிரயபவனாத் ஸர்வமோக்ஷே'பி லப்யः ॥ (47)

**द्विजवरकुले** பிராம்மண சிரேஷ்டர்கள் குலத்தில் **दिष्ट्या** தெய்வாதீனமாக **जन्म** பிறப்பு **लब्धं** கிடைத்தது; **तत्रापि** அதிலும் **दिष्ट्या** அதிர்ஷ்ட வசத்தால் **गुरूणां** குருக்களின் **प्रसादात्** அனுக்கிரஹத்தால் **धर्माधर्मस्थितिः** தர்மம் அதர்மம் இவைகளின் வரன்முறை **अवगता एव** அறியப்பட்டது. **अस्मिन् जन्मनि अपि** இந்த ஜன்மத்திலேகூட **मे** எனக்கு **आस्तिकत्वं** பரலோக நம்பிக்கை **यदि न संभवेत्** உண்டாகவில்லையானால் **निरयभवनात्** நரகத்திலிருந்து **निस्तारः** கரையேறல் **सर्वमोक्षेऽपि** எல்லா ஜீவர்களுக்கும் மோக்ஷம் கிடைக்கும் காலத்திலேகூட **किं लभ्यः** கிடைக்குமா?

பிராம்மண சிரேஷ்டர்களின் வம்சத்தில் அதிர்ஷ்ட வசத்தால் பிறந்து தெய்வானுகூல்யத்தாலும் குருக்களின் அனுக்கிரஹத்தாலும் தர்மம் எது அதர்மம் எது என்ற விவேகமும் ஏற்பட்டிருக்கிற இந்த ஜன்மத்திலே கூட பரலோக சிரத்தை எனக்கு உண்டாகவில்லையென்றால், ஸர்வமோக்ஷம் என்று சொல்லக்கூடிய காலத்திற் கூட எனக்கு மோக்ஷம் கிடைக்க நியாயமில்லை.

**भव्ये देहे पटुषु करणेष्वालये श्रीसमृद्धे**
**कौमारान्ते वयसि कथमप्यप्रवृत्ते च दुःखे ।**
**प्रत्यक्पुष्पीप्रसवविधया यस्य पुंसो निसर्गात्**
**प्रत्यग्वक्त्रं भवति हृदयं कस्ततोऽप्यस्ति धन्यः ॥ ४८ ॥**

ஹவ்யே ஜேஹே படுஷு கரணேஷ்வாலயே ஶ்ரீஸம்ருத்தே
கௌமாராந்தே வயஸி கதமப்யப்ரவ்ருத்தே ச து:கே |
ப்ரத்யக்புஷ்பீப்ரஸவவிதயா யஸ்ய பும்ஸோ நிஸர்காத்
ப்ரத்யக்வக்த்ரம் ஹவதி ஹ்ருதயம் கஸ்ததோ'ப்யஸ்தி தன்ய: |

**भव्ये देहे** சரீரம் திடமாயிருக்க **करणेषु पटुषु** இந்திரியங்கள் சுறுசுறுப்பாயிருக்க **आलये श्रीसमृद्धे** இருப்பிடத்தில் லக்ஷ்மீ விலாஸமிருக்க **कौमारान्ते वयसि** பால்யம் கடந்த (யௌவன) வயதில் **कथमपि** எவ்விதத்திலும் **दुःखे च अप्रवृत्ते** கஷ்டம் வராமலிருக்கும்போதே **यस्य पुंसः** எவனுக்கு **प्रत्यक्-पुष्पीप्रसवविधया** தலைகீழாய்ப் பூக்கிற நாயுருவியின் பூக்காம்பு மாதிரியாய் **निसर्गात्** தானாகவே **हृदयम्** மனது **प्रत्यग्वक्त्रं** உள்நோக்கமுடையதாக **भवति** ஆகிறதோ **ततोऽपि** அவனைக் காட்டிலும் **धन्यः** பாக்கியசாலி **कः अस्ति** எவன் இருக்கிறான்?

புண்ணியாத்மாக்களான சிலர்க்கே சரீர திடமும் மற்றுமுள்ள வாழ்க்கை ஸௌகரியங்களும் நிரம்பியிருக்கும்போதே, யௌவனப் பருவத்திலேயே நாயுருவிப் பூக்களைப்

போல் உள்நோக்கமுடையதான வைராக்யம் ஏற்பட்டு விடுகிறது. அத்தகையோரே பாக்கியசாலிகள்.

नाहं याचे पदमुडुपतेर्नाधिकारं मघोनो
नापि ब्राह्मीं भुवनगुरुतां का कथाऽन्यप्रपञ्चे ।
अन्यस्यान्यः श्रियमभिलषन्नस्तु कस्तस्य लोको
मह्यं शंभो दिश मसृणितं मामकानन्दमेव ॥ ४९ ॥

நாஹம் யாசே பதமுடுபதேர் நாதிகாரம் மகோனோ
நாபி ப்ராஹ்மீம் புவன குருதாம் கா கதா'ன்யப்ரபஞ்சே |
அந்யஸ்யான்ய: ஶ்ரியமபிலஷன்னஸ்து கஸ்தஸ்ய லோகோ
மஹ்யம் ஶம்போ திஶ மஸ்ருணிதம் மாமகானந்தமேவ ‖ (49)

**अहं** நான் **उडुपतेः पदं न याचे** சந்திரனுடைய லோகத்தை விரும்பவில்லை; **मघोनः अधिकारं न** இந்திரனுடைய அதிகாரம் வேண்டுமென்று கேட்கவில்லை; **ब्राह्मीं भुवन-गुरुतां नापि** பிரும்மாவினுடைய லோகபூஜ்யராயிருக்கும் பெருமையையும் கோரவில்லை; **अन्यप्रपञ्चे का कथा** வேறு உலகங்களின் விஷயத்தில் சொல்ல வேண்டுவதென்ன? **अन्यस्य श्रियम्** மற்றவனுடைய ஸம்பத்தை **अन्यः अभिलषन्** வேறொருவன் ஆசைப்பட்டால், **तस्य कः लोकः अस्तु** அவனுக்கு எந்த உலகம் கிடைக்கும்? **शंभो** ஈச்வரா! **मह्यं** எனக்கு **मसृणितं** அதிக ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய **मामकानन्दम् एव** எனக்குச் சொந்தமான ஆனந்தநிலையையே **दिश** கொடுப்பீராக.

இந்திரன் சந்திரன் பிரம்மா முதலியவர்களின் பதவிகளுக்கே நான் ஆசைப்படவில்லை. மற்ற அற்ப பதவிகளை எங்கு விரும்பப்போகிறேன்? பிறர் பதவியை விரும்புகிறவன் நல்ல கதியை அடைவானா? நான் கேட்பது என்னுடைய தான பதவியையே; சம்போ! அதைக் கொடுத்தருளும்.

இதனால் ஆத்மானந்தத்தைக் கேட்கிறார்.

आगर्भादाकुलपरिबृढादा चतुर्वक्त्रतोऽपि
त्वत्पादाब्जप्रपदनपरान् वेत्सि नश्चन्द्रमौले ।
मायायाश्च प्रपदनपरेष्वप्रवृत्तिं त्वमात्थ
स्वामिन्नेवं सति यदुचितं तत्र देवः प्रमाणम् ॥ ५० ॥

ஆகர்பாதாகுலபரிப்ருடாதா சதுர்வக்த்ரதோ'பி
த்வத்பாதாப்ஜப்ரபதனபரான் வேத்ஸி நஶ்சந்த்ரமௌளே |
மாயாயாஶ்ச ப்ரபதனபரேஷ்வப்ரவ்ருத்திம் த்வமாத்த
ஸ்வாமின்னேவம் ஸதி யதுசிதம் தத்ர தேவः ப்ரமாணம் || (50)

**चन्द्रमौले** சந்திரசேகரரே! **आगर्भात्** நான் உண்டானது முதல் **आकुलपरिबृढात्** என் குல கூடஸ்தர் முதற்கொண்டு **आचतुर्वक्त्रतः अपि** பிரும்மா முதற்கொண்டு எங்கள் வம்சத்தைக் கணக்கிட்டுப் பார்த்தாலும் **नः** எங்களை **त्वत्पादाब्ज-प्रपदनपरान्** உம் பாதகமலங்களே கதியென்று அடைக்கலம் புகும் விரதமுடையவர்களாக **वेत्सि** நீர் அறிவீர்; **प्रपदनपरेषु च** உன்னைச் சரணம் அடைபவர்கள் விஷயத்தில் **मायायाः** மாயையின் **अप्रवृत्ति** பரவுதலின்மையை **त्वम् आत्थ** நீர் சொல்லியிருக்கிறீர்; **स्वामिन्** பிரபுவே! **एवं सति** இவ்விதமிருக்க **यत् उचितं** எது நியாயமோ **तत्र** அதுவிஷயத்தில் **देवः प्रमाणम्** தங்களிஷ்டமே திட்டம்.

பரம மாஹேச்வரர்களுடைய வம்சத்தில் பிறந்த என்னை நீர் ரக்ஷிக்கத்தான் வேண்டும்; பிரும்மா முதல் எங்கள் பரம்பரையில் கர்ப்பத்திலிருக்கும் குழந்தைவரை நாங்கள் எல்லோரும் உம்மையே சரணமடைந்தவர்கள் என்பது உமக்குத்தெரியும்; உம்மைச் சரணமடைந்தவர்களுக்கு மாயையென்ற திரை இடையூறுகாது என்று நீர் வாக்குக் கொடுத்திருக்கிறீர். இருக்கிற விஷயங்களை உள்ளபடி உம்மிடம் தெரிவித்துவிட்டேன். இனி உம் இஷ்டம்; உசிதம்போல் நடத்தும்.

दण्डं धत्ते सकलजगतां दाक्षिणो यः कृतान्तो
नामाप्यस्य प्रतिभयतनोर्नोपगृह्णीमहीति ।
प्राप्ताः स्मस्तं निगमवचसामुत्तरो यः कृतान्तो
यद्वा तद्वा भवतु न पुनस्तस्य पश्येम वक्त्रम् ॥ ५१ ॥

உண்டம் யுத்தே ஸகலஜகதாம் உக்ஷிணோ யஃ க்ருதாந்தோ
நாமாப்யஸ்ய ப்ரதிபயதநோர்நோப க்ருஹ்ணீமஹீதி ।
ப்ராப்தாஃ ஸ்மஸ்தம் நிகமவசஸாமுத்தரோ யஃ க்ருதாந்தோ
யத்வா தத்வா பவது ந புநஸ்தஸ்ய பஶ்யேம வக்த்ரம் ॥ (51)

**दाक्षिणः** தெற்கேயுள்ள **यः कृतान्तः** எந்த யமன் **सकलजगताम्** எல்லாபிராணிகளுக்கும் **दण्डं धत्ते** தண்டம் விதிப்பவனோ **प्रतिभयतनोः** பயங்கர ரூபமுடைய **अस्य** இவனுடைய **नामापि** பெயரைக்கூட **नोपगृह्णीमहि** நாங்கள் ஸ்மரிக்க மாட்டோம் **इति** என்று **यः** எவர் **निगमवचसाम्** வேதவாக்கியங்களுக்கு **उत्तरः** எட்டாத (அப்பாலுள்ள) **कृतान्तः** கிருதாந்தரோ (முடிவானபொருளோ) **तं प्राप्ताः स्मः** அவரைச் சரணம் அடைந்திருக்கின்றோம்; **यद्वा तद्वा भवतु** எது வந்தாலும் வரட்டும்; **तस्य वक्त्रं** அவனுடைய (யமனுடைய) முகத்தை **पुनः न पश्येम** மறுபடி பார்க்காமலிருப்போமாக.

தெற்கே வசிக்கும் யமன் முகத்தில் விழிக்கக் கூடாது என்று (வடக்கே அவனுக்கும் யமனாக இருக்கும்) வேதங்களுக்கெட்டாத ஸர்க்கஸ்திதிப்ரளயப் பிரபுவான உம்மைச் சரணமடைந்தோம். இனி என்ன ஆனாலும், யமனுடைய முகதரிசனம் எமக்குக் கிடையாது என்பதுமட்டும் நிச்சயம்.

(மோக்ஷம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சிவதூதர் முகம் பார்ப்பேனே ஒழிய, யமதூதர்கள் என்னிடம் அணுகமாட்டார்கள்.)

ஸ்ரீ ஶாந்தி விலாஸம் முற்றிற்று.

# விஞ்ஞாபனம்

ஆஸ்திகர்கள் அனைவரும் வைதிக மார்க்கத்திலே பற்றுடையவர்களாயும் பகவானிடத்து பக்தி மிகுந்தவர்களாயும் சிரத்தையுடையவர்களாயும் செய்வதற்கு அனுகுணமாக நமது ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளால் ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம் என்ற ஸ்தாபனம் ஒன்று இவ்வாண்டிலே தொடங்கப் பெற்றுள்ளது யாவரும் அறிந்ததே.

ஸ்ரீ ஆசார்யர்கள் சில ஆண்டுகளாக ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்தை எல்லோரும் பிரதிதினம் செய்து வரவேண்டுமென்று ஆக்ஞைசெய்து வருகிறார்கள். அதன்படி பாராயணஞ் செய்து, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை மனப்பாடமாக்கிக் கொண்டவர்கள் "மேலே என்ன செய்வது?" என்று ஸ்ரீ ஆசார்யர்கள் ஆக்ஞையிட வேண்டும் என்றபோது, ஸ்ரீ ஆசார்யர்கள் உபதேசித்ததாவது :

"ஸஹஸ்ரநாம பாராயணத்தால் உங்களுக்கு வாக் சுத்தியும் ஈச்வர கிருபையும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றோடு சிறிது வேத பாஷா ஞானமும் ஏற்பட்டால் மேற்கொண்டு புண்ய நூல்களைப் பார்த்து நற்கதி யடைய ஸௌகர்யமாக இருக்கும், அதற்குப் பண்டிதர்கள் அகப்படாத இடங்களில், தமிழிலே பதவுரை பொழிப்புரைகள் எழுதப்பெற்றதாய்க் கோசஸ்தானத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பஜ கோவிந்தம் என்னும் நூலைத் தாமாகவே அர்த்தத்துடன் பாடமாக வாசித்து நெட்டுருச் செய்யவேண்டும், 'பஜ கோவிந்தம்' முடிந்த பிறகு, கோசஸ்தானத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ஸதாசிவ ப்ரம்மேந்திராள் ஸ்தோத்திர புஸ்தகத்தை அவ்விதமே பாடம் செய்ய வேண்டும், அதனை அடுத்து, லோஷ்டதேவருடைய தீனாக்ரந்தனம் என்னும் புஸ்தகத்தை அவ்விதமே பாடம் செய்யவேண்டும், அதற்குப் பிறகு, ஆதி ஆசார்ய ஸ்வாமிகளுடைய விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரத்தைப் பாடம் செய்யவேண்டும். அதற்கும் பிறகு அநேகமாய்ப் பாதி வ்யுத்பத்தி ஏற்பட்டுவிடுமாதலால், ஸஹஸ்ரநாம பாஷ்யத்தைப் படித்து அதன் பொருளை அறிந்துகொள்ள வேண்டும்."

—காமகோடி, 19—10—'43.

இதற்குமேல் கோசஸ்தானத்திலிருந்து வெளியிடும் புதிய புத்தகங்களையும் அப்போதைக்கப்போது தருவித்து அர்த்தத்துடன் பாடம் செய்து, நலம் அடையவேண்டியதைப்பற்றி அதிகம் எழுதவும் வேண்டுமா?

**ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், கும்பகோணம்.**

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் பாஷ்யத்திற்கு
வே. நாராயணன் எழுதிய தமிழ் அனுவாதத்துடன் கூடியது.
திருத்திய இரண்டாம் பதிப்பு விலை ரூ. 1–4–0 தபாற்செலவு 0–4–0

உலகம் எங்கும் சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது; இப்போது பொதுஜனங்கள் செய்யவேண்டியது என்ன? அவர்கள் நன்மை பெறுவது எப்படி? லோக க்ஷேமத்தை நாடி அவர்கள் என்ன செய்யலாம்?

இந்தக் கேள்விகளுக்கு விடையாக அமைந்தது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம். பக்தியோடு இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணஞ் செய்தால் இவ்வுலகிலே சுகமாக வாழலாம்; மேலுலகிலும் சுகத்தைப் பெறலாம்; பயம் நீங்கிவிடும்; வந்த ஆபத்து விலகிப்போம்; நோய் பீடிக்காது; எல்லா இடையூறுகளையும் சுலபமாகக் கடந்து விடலாம்; சுகம் உண்டு, செல்வம் உண்டு, புகழ் உண்டு. கோபம், லோபம், மோஹம் முதலிய துர்க்குணங்கள் நம்மைவிட்டு நீங்கிவிடும். பொறுமை, தைர்யம், வீர்யம், தேஜஸ் முதலிய குணங்கள் நம்மிடம் விளங்கும். 'இது வெறும் வார்த்தையன்று, உண்மையே' என்று ஸ்ரீசங்கர பகவத் பாதர்கள் உறுதி கூறுகிறார்கள்.

பாராயணத்திலே சிரத்தைவேண்டும். அதற்கு அனுகூலமாக, ஸஹஸ்ர நாமங்களுக்கும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் பாஷ்யஞ் செய்திருக்கிறார்கள். விஷ்ணுவின் நாமாக்களை ஸங்கீர்த்தனஞ் செய்வதால் பரிபூர்ண ஞானம் உண்டாகும் என்றும் புராண புருஷனை ஸ்துதிப்பவர்கள் உண்மை ஞானிகளாகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

கண்ணைக் கவரும் அழகிய மூன்றுவர்ணப் படங்களும் 248 பக்கங்களும் கொண்ட இந்தப் புஸ்தகத்திற்கு **மிகவும் குறைந்த விலை ரூ. *1—4—0***

**கிடைக்குமிடம்:**

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்,
57, மேல டபீர் தெரு, கும்பகோணம்.

**The Liberty Press, Madras.**